Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்து மா



ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்

இணுவில் (சி-1764) T.P.-2223565

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 13 (08.11.2003) சனிக்கிழமை இதழ்:39

**விண்ணாணம் விநாசியர்**



ரணிலையும் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் வைச்சிட்டா அம்மா..

# நாட்டில் சமாதானத்தை முன்னெடுப்பதற்கு மக்கள் தந்த ஆணையை உறுதி செய்வேன்!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

நாட்டில் சமாதானத்தையும், பொருளாதார சுபீட்சத்தையும் தொடர்ந்து தமது அரசுக்கு மக்கள் வழங்கிய ஆணையை முன்னெடுத்துச் செல்வதற்கு உறுதியுடன் செயற்படப்போவதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விமான நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை கைவிடாமல், தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை நடத்தி, அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு மக்களின் ஆணையைப் பெற்ற ஒரே அமைப்பாக நாடாளுமன்றம் விளங்குகின்றது.

நாடாளுமன்ற அமர்வுகள் கூட்டப்படாவிட்டால், முக்கிய நடவடிக்கைகள் (10 ஆம் பக்கம்பார்க்க)

# ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்; ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தயாராகின்றது!



## பிரதமர் அமைச்சர்களுடன் ஆராய்வு

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.**

மூன்று முக்கிய அமைச்சர்களைப் பதவிநீக்கம் செய்தமை, திடீரென அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தமை, போன்ற தொடர்ச்சியான ஜனநாயக வரம்புகளை மீறிய ஜனாதிபதியின் செயற்பாடுகளால், ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்மீது கோபமுற்றிருப்பதாக ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவது குறித்து, கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எடுத்துக் கூறப்பட்டதாகவும் -

இதற்கு ஜனாதிபதி மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்போவதாக பிரதமர் உறுதியளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மூன்று முக்கிய அமைச்சர்களைப் பதவி நீக்கியது தொடர்பாக ஜனாதிபதி விளக்கமளிக்கவேண்டும் என்று, ஐ.தே.க.நாடாளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது. அத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை ஜனாதிபதியைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதுடன், இந்தச் சந்திப்பில் (10 ஆம் பக்கம்பார்க்க)

## ரணில் விக்கிரமசிங்கவுக்கு உயர் பாதுகாப்பை வழங்குக!

### ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு அதிக பாதுகாப்பை வழங்குமாறு, பதில் பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தகவலை, ஜனாதிபதி செயலகம் நேற்றுமாலை அறிவித்துள்ளது.

நேற்று ஜனாதிபதி மாளிகையில் பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் 32 பிரதிப் பொலிஸ் மா அத்தியட்சகர்கள் ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பின்போதே, இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

சமாதானத்துக்கு பங்கம் ஏற்படாத வகையில், எந்த வகையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு (10ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அரசு அமைக்க சந்திரிகாவால் அழைப்பு

## 19 ஆம் திகதிக்கு பின் வரவு-செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்!

# தேசிய அரசு அமைக்க சந்திரிகாவால் அழைப்பு

(கொழும்பு)

அனைத்துக் கட்சிகளும் இணைந்த தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கமொன்றை அமைக்க முன்வருமாறு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

மூன்று முக்கிய அமைச்சர்களைப் பதவிநீக்கம் செய்து - நாட்டில் பலத்த அரசியல் நெருக்கடி உருவானதன் பின்னர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

எதிரணியிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் இணைத்து, தேசிய அரசாங்கமொன்றை கட்டியெழுப்ப விரும்புவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக -அனைத்துக் கட்சிகளினுடனும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தலைவர்களுடனும் பேச்சுக்களை நடத்தத் தயாராகவிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்!

## ஜனாதிபதி சந்திரிகா நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதமர் ரணிலின் அரசாங்கம், கடந்த இரண்டு வருட காலத்தில் நாட்டின் இறைமையையும், பாதுகாப்பையும் பேணும் விதத்தில் நடந்துகொள்ள வில்லையென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு, உள்துறை மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்களைப் பொறுப்பேற்றது தொடர்பாக நேற்றிரவு உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் பல ஆயுதக் கப்பல்கள் மூலம் தமக்கு தேவையான அளவு ஆயுதங்களைப் பெற்று வருகின்றனர். அண்மையில் விடுதலைப் புலிகளின் 9 ஆயுதக் கப்பல்கள் இலங்கையை வந்தடைந்தன.

இதில் 3 கப்பல்கள் எமது செயற்பாட்டினால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன. ஏனைய ஆயுதக் கப்பல்கள் தப்பிச் செல்வதற்கு இந்த அரசே பொறுப்பேற்கவேண்டும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி அவசரகால சட்டத்தில் கையொப்பம் இடவில்லையாம்!

## பேச்சாளர் ஹரீம் பீரிஸ் கூறுகிறார்

அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்படாமையால் அதனை நீக்குவது தொடர்பாக அறிவிக்கவேண்டிய அவசியம் இல்லையென ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், அவசரகாலச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் ஜனாதிபதியின் கையொப்பம் இருக்கவேண்டும். ஆனால் அவ்வாறானதொரு கையொப்பத்தினை ஜனாதிபதி இடவில்லை எனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த அவசரகால சட்டம் தொடர்பாக ஊடகங்களே தவறான செய்தி வெளியிட்டன. தற்போது ஊடகங்களே சட்டத்தை நீக்கப் போவதாகவும் அறிவித்துள்ளன என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை, அவசரகால நிலை தொடர்பான வர்த்தமானி அறிவிக்கப்படாமையால், அதற்கு சட்ட வலுவில்லையென அரசாங்க அச்சகர் நெவில நாணயக்கார தெரிவித்தார்.

# நாடு திரும்பிய பிரதமர் ரணிலுக்கு இலட்சக்கணக்கானோர் வரவேற்பு

(கொழும்பு)

அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்டுநாயக்க விமான நிலையத்திலும் - அவர் பயணம் செய்த வீதியிலும் திரண்டு நின்ற சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் உற்சாகமாக வரவேற்பளித்தனர்.

நேற்றுக்காலை 8.40 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விமான நிலையத்தில் பௌத்த, இந்து மத குருமார் ஆசீர்வாதம் வழங்கினர்.

இதையடுத்து பிரதமரை உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் சூழ்ந்துகொண்டனர். செய்தியாளர்களுடன் உரையாடிய பின்னர், விமானநிலையத்தை விட்டு வெளிவந்த பிரதமரை ஆயிரக்கணக்கான கட்சி ஆதரவாளர்கள் வரவேற்றனர்.

பிரதமர் அலரி மாளிகைக்கு பிரயாணத்தை மேற்கொண்ட வீதியில் இருமருங்கிலும் திரண்டிருந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் - ஆரவாரமாக (10ஆம் பக்கம் பார்க்க)

EXPOAir
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

## மழைநேரத்தில்

# திருநெல்வேலிச் சந்தையில் வியாபாரம் செய்யமுடியாத நிலை

மழை நேரங்களில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது திருநெல்வேலிச் சந்தை வியாபாரிகள் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மாரிகாலம் ஆரம்பித்து விட்டமையால் அடிக்கடி பெருமழை பெய்கிறது. கூரைகள் ஒழுங்காக இல்லாமையால் மழைபெய்யும்போது, தூவானம் எத்துவதனால் பொருட்கள நீரில் நனைந்து, அவற்றை பின்னர் விற்பனை செய்யமுடியாதநிலை காணப்படுவதாக, வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

கூரைகளிலிருந்து வழிந்தோடும் மழைநீரும் சந்தைக் கட்டடப்பகுதியிலிருந்து வெளியேறாமல், சந்தைப் பகுதியில் தேங்கி நிற்கின்றது. இதனால் பொருட்களைக் கொள்வனவு செய்யவரும் பொதுமக்களும், வியாபாரிகளும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர்.

வியாபாரிகள் அமர்ந்திருந்து வியாபாரம் செய்யும் இடங்களும் சீமெந்துத் தரையிடப்படாத நிலையிலுள்ளன. இதனால் மழைநேரங்களின் போது வியாபாரிகள் தமது பொருட்களை வைத்துள்ள இடத்திற்கும் வெள்ளம் புகுந்துவிடும் அபாயமுள்ளது.

இதுதொடர்பாக பல தடவைகள் நல்லூர் பிரதேச சபையில் முறையிடப்பட்டபோதிலும், இதுவரை எதுவித நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லையென வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை, சந்தைக் கட்டடத் தொகுதிகள் நவீனமுறையில் புதிதாக அமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

அமரர் கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனை 09.11.2003 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெறும்.

தனிப்பட்ட அழைப்புகள் கிடைக்காதவர்கள் தயவு செய்து இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகமளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

(524) குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை, கூழாவடி, தபாற்கந்தோருக்கு அருகாமையில் அமைந்துள்ள 9 பரப்பு 12.79 குழி விஸ்தீரனம் கொண்ட காணியும், அதனோடு இணைந்த கட்டடங்களும் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புபவர்கள், **தலைவர், கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கே.கே.எஸ்.வீதி, தாவடிச்சந்தி, கோண்டாவில்** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 10.12.2003 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் காணி விற்பனைக்கான கேள்விப் பத்திரம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பொது முகாமையாளர்,**
**பனை தென்னை வள அபிவிருத்திக்**
**கூட்டுறவுச் சங்கம்,**
**கோண்டாவில்**

(சி-1787)

## 'HAPPY BIRTHDAY' பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி யதுர்சனா

உடுப்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி த.சுதாகர் துஷாந்தினியின் செல்வப் புதல்வி செல்வி யதுர்சனா தனது முதலாவது பிறந்தநாளை இன்று 08.11.2003 சனிக்கிழமை தனது அப்பா, அம்மாவுடன் உடையார் வளவு, இமையாணன், உடுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். யதுர்சனாவை அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமியார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பாமார், பெரியமாமார், அக்காமார், அண்ணாமார், அன்ரிமார் மற்றும் உறறார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் செல்வச்சந்நிதி முருகனின் அருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் சிறப்பாக வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

உடையார் வளவு,
இமையாணன், உடுப்பிட்டி.
(சுதா வீடியோ)

திரு.திருமதி.சுதாகர்
T.P.021- 2263707
0777-568530

(சி-1769)


## சின்னஞ்சிறு செய்திகள்

### பரிசளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தின் பவளவிழா ஆண்டின் பரிசளிப்பு விழா நாளை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலலூரி அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் - யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

### பேராளர் மாநாடு ஒத்திவைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில இன்று நடைபெறவிருந்த தென்மராட்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக, தென்மராட்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாடு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### மகளிர் அபிவிருத்தி நிலையக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் பெண்கள் பிரச்சினைகளில் தொழிற்சங்கங்களின் அணுகுமுறை பற்றிய இருநாள் கருத்தரங்கு - இன்றும், நாளையும் காலை 9 மணி தொடக்கம் 4 மணிவரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் - தொழிற்சங்கங்களில் பெண்களின் தலைமை, பெண்களின் பிரச்சினைகளில் தொழிற்சங்கங்கள் காட்டும் அக்கறை மற்றும் அபிவிருத்தித் திட்டங்களில் பெண்களை ஈடுபடுத்தல் போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

### உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை நடைபெறவுள்ள ஆட்டங்களில் சென்.நீக்கிலஸ் பி அணியினை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக்கழகமும், சென்.நீக்கிலஸ் ஏ அணியை எதிர்த்து சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

இந்த ஆட்டங்கள் அனைத்தும் உரும்பிராய் இந்துமகளிர் மைதானத்தில் மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளன.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்

# அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம் நேற்று தென்மராட்சியில் திறப்பு

(தென்மராட்சி)

தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சி கிளை நிறுவனமான தென்மராட்சி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகம், நேற்று 11.30 மணியளவில் சாவகச்சேரி ஐயா கடையடிச் சந்தியில் திறந்துவைக்கப்பட்டது.

சங்கத்தானை கிராம சேவையாளர் வேலாயுதம் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில், மங்கள விளக்கினை வைத்தியக் கலாநிதி அருளானந்தம், தென்மராட்சி பிரதேச செயலர் செ.சிறினிவாசன், முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் பாக்கியராஜ், தென்மராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், சமாதான நீதிவான் இராசரட்ணம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை தமிழர் புனாவாழ்வுக்கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் க.ஜெயராஜ் ஏற்றிவைத்தார். சமாதான நீதிவான் இராஜரட்ணம் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செயதார். தென்மராட்சி பிரதேச செயலாளர் நாடாவை வெட்டி அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

பிரதேச செயலர் சிறிநிவாசன், முன்னாள் அதிபர் சந்திரசேகரம், கிராம உத்தியோகத்தர் இராஜரட்ணம், உதவிக் கல்விப் பணிப்பாளர் பாக்கியராஜ், வைத்தியக் கலாநிதி அருளானந்தம் ஆகியோரின் ஆசியுரை நிகழ்வுகளும், இதனைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜின் உரையும் இடம்பெற்றது.

# கல்வியியல் வெளியீட்டு நிலையத்தின் 'கல்வியலாளன்' நூல் வெளியீடு இன்று

கல்வியியல் வெளியீட்டு நிலையத்தினால் இன்று 'கல்வியியலாளன்' என்னும் ஆய்வுநூலொன்று வெளியிடப்படவுள்ளது. யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் மாலை 3 மணிக்கு இந்த நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது.

இரு அமர்வுகளாக இடம்பெறும் இந்த நூல் வெளியீட்டு விழாவில்- முதல் அமர்வுக்கு ச.சதாகரனும், இரண்டாம் அமர்வுக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கமும் தலைமைதாங்கவுள்ளனர்.

இவ்விழாவில் - ஆசியுரைகளையும், வாழ்த்துரைகளையும் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாசும், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் மற்றும் சபா.ஜெயராசா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூலிற்கான வெளியீட்டுரையையும், மதிப்புரையையும் முறையே யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.கமலநாதனும் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் நியூஸிலாந்து மஸ்சி பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி வி.நித்தியானந்தமும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ள ஆய்வாளர்கள் யாழ்.பல்கலைக்கழக கல்வியியல்துறைத் தலைவர் மா.சின்னத்தம்பியால் கௌரவிக்கப்படவுள்ளனர். இந்த நூலில் பல்வேறு துறைகளையும் சார்ந்த ஆய்வுக்கட்டுரைகள் கல்வியலாளர்கள் பலரால் எழுதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (62)

# லியோக்கழக அங்கத்தவர்களுக்கு நாளை தலைமைத்துவக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் லியோக் கழகங்களின் உறுப்பினர்களுக்கான தலைமைத்துவம் மற்றும் லியோக் கழகங்களின் செயற்பாடு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று, யாழ். இந்துக் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

லியோக் கழகங்களின் மாவட்டத் தலைவர் லியோ எஸ்.பிரகலாதனால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் - பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. இதில் அனைத்து லியோக் கழகங்களின் உறுப்பினர்களும் பங்குபற்றி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.





உத்தரவு பெற்ற **சிங்கர்** விற்பனையாளர்

சகல விதமான மின் விசிறிகள்,

காஸ்குக்கர்கள்,

சிசில், சிங்கர் குளிர்சாதனப் பெட்டிகள், சிங்கர்

தையல் இயந்திரங்கள் அதன் உதிரிப்பாகங்கள்,

துணி துவைக்கும் இயந்திரம் இவை அனைத்தையும்

உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள நீங்கள்

நாடவேண்டிய ஒரே இடம்

# ஊஷா ஏஜென்சி

62/32, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P. 222 6982

(சி.1560)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)

அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை எதிர்த்துச் செய்யப்பட்ட மேன்முறையீட்டின் மீதான விசாரணை, எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி, சிஹல உறுமய, சிங்கள மகாசங்கம் என்பன இணைந்தே இந்த மேன்முறையீட்டைச் செய்திருந்தன.

நேற்றையதினம் - கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிவான் - மன்றிற்குச் சமுகமளிக்காமையாலேயே, இந்த வழக்கு விசாரணை, எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (01)

## களுத்துறை தபாலகத்தில் 49 லட்சம் ரூபா கொள்ளை

(கொழும்பு)

மோட்டார்சைக்கிளில் வந்த கொள்ளையர்கள் - களுத்துறை தபாலகத்திலிருந்த 49 லட்சம் ரூபாவை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், ஓய்வூதியம் வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த பணமே கொள்ளையிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளையர்களைக் கைது செய்யும் நோக்குடன், களுத்துறைப் பொலிஸாரால் மூன்று விசேட குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)



நேற்றுமுன்தினம் தேனகத்தில் இடம்பெற்ற மீனிசை ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில், மூத்த தளபதி கேணல் கருணாம்மான்- பாடல்களைப் பாடிய போராளிக்குச் சான்றிதழ் வழங்கு வதைப் படத்தில் காணலாம்.

## அரசியல் குழப்பநிலையால் பங்குச் சந்தையும் வீழ்ச்சி

அரசியலில் ஏற்பட்டிருக்கும் குழப்பநிலையைத் தொடர்ந்து, கொழும்பு பங்குச்சந்தை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மூன்று முக்கிய அமைச்சர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால பதவிநீக்கப்பட்டு, அவர்களின் அதிகாரங்களை - ஜனாதிபதி தமது பொறுப்பில் எடுத்துக்கொண்ட பின்னரே கொழும்பு பங்குச்சந்தை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சர்களின் பதவிநீக்கம் குறித்த தகவல் வெளியான சில மணி நேரங்களிலேயே கொழும்பு பங்குச் சந்தை 70 புள்ளிகளால் அல்லது 5 வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பெறுமதியடிப்படையில் சந்தை முதலீடு 17.2 மில்லியன் ரூபாவினால் சரிவடைந்தது.

அண்மைக்காலத்தில் அடிப்படையில் வேகமாக முன்னேறி வந்த கொழும்பு பங்குச்சந்தை ஒரே நாளில் வீழ்ச்சியடைந்தது குறித்து வர்த்தக வட்டாரங்கள் அதிர்ச்சி தெரிவித்துள்ளன.

## வவுனியா நீதிமன்ற ஊழியர்கள் நேற்றுமுன்தினம் மறியற்போராட்டம்!

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிராக, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நாடாளுமன்றத்தில் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிர்ப்புத்தெரிவித்து, வவுனியா நீதிமன்ற ஊழியர்கள் நேற்றுமுன்தினம் அரைநாள் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மறியற்போராட்டத்தில் ஈடுபட்ட நீதிமன்ற ஊழியர்கள்- பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குக் கண்டனம் தெரிவித்துப் பதாகைகளை வைத்திருந்ததுடன், தாம் பிரதம நீதியரசருக்கு ஆதரவாக இருப்பதாகவும் தெரிவித்தனர்.



பிரதம நீதியமைச்சர் சரத் என்.சில்வாவுக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிவான்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

## ஜனாதிபதி சந்திரிகாவின் அதிரடி நடவடிக்கைக்கு வை.கோ, கருணாநிதி ஆகியோரும் எதிர்ப்பு

இலங்கையின் தற்போதைய திடீர் அரசியல் மாற்றங்கள் குறித்து- கலைஞர் கருணாநிதி, வை.கோ.



போன்றவர்கள் தங்கள் ஆதங்கங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இலங்கை நாடாளுமன்றத்தை முடக்கியும், அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்தும், அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தும் - இலங்கை அரசில் அதிரடி மாற்றங்களை மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி சந்திரிகா - இலங்கையில் இடம்பெறும் அமைதிப் பேச்சுவார்த்தைக்குக் குந்தகம் விளைவித்து விடுவார் என்று, தான் கவலையடைவதாகவும், அந்தச்செய்தி தன்னை சம்மட்டியால் தாக்கியதுபோல், தான் வேதனையடைவதாகவும் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, பூந்தமல்லி பொடா நீதிமன்ற நீதிபதி விடுப்பில் சென்றுள்ளதால், நீதிபதி தேவதாஸ் வீட்டில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்பட்ட வை.கோ, அதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது- இலஙகை இனப்பிரச்சினைக்கான அமைதிப் பேச்சுவார்த்தையை நடத்தவிடாமல் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பத்திலிருந்தே இடையூறு செய்து வருவதாகக் குறிப்பிட்டார்.

இந்நிலையில், உடனடியாகப் போரைத் தொடங்கினால் தன்மீது உலகநாடுகள் பழிசுமத்தும் என எண்ணி, எதாவது ஒரு காரணத்தைக்காட்டி, பேச்சுவார்த்தையை நடத்தவிடாமல் செய்து, மீண்டும் இனப்படுகொலையை அவர் ஏவிவிடலாம் என்று, தான் அஞ்சுவ



தாகத் தெரிவித்தார்.

சிங்கள மக்களே இப்போரை விரும்பவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான நடவடிக்கையை வரவேற்கிறார்கள். இந்நிலையில், இலங்கைப் பிரதமரின் முயற்சிக்கு முழு ஆதரவு தந்து, ஜனாதிபதி சந்திரிகாவிற்கு உரிய அறிவுரை கூறவேண்டியது இந்தியாவின் தலையாய கடமை என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

### அவுஸ்திரேலிய பிரஜைகளுக்கு அந்நாட்டு அரசு எச்சரிக்கை

இலங்கையில் இடம்பெறும் ஆர்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றில் கலந்துகொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அவுஸ்திரேலிய அரசு - தனது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையின் அரசியல் நிலமை குறித்து அவுஸ்திரேலிய அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாகவும், வெளிநாட்டு செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக இலங்கையின் அரசியல் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் குறித்து, அவுஸ்திரேலிய பிரஜைகளை அவதானமாக இருக்குமாறு - அவுஸ்திரேலிய அரசு தனது பிரஜைகளைக் கேட்டுள்ளது.

## சமாதான முயற்சிகள் தொடரும் சீன அரசு நம்பிக்கை தெரிவிப்பு!

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் - விடுதலைப்புலிகளுடனான சமாதான முயற்சிகளை, தொடர்ந்து முன்னெடுக்கும் என்று சீனா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சீன வெளியுறவு அமைச்சின் பெண் பேச்சாளர் ஷாங் குயி - இலங்கை அரசியல் நெருக்கடி குறித்து கருத்து வெளியிடும்போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

அமைதியான, நிலையான இலங்கை அரசியல் நிலையை - சீனா நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று நாம் நம்புகின்றோம். எனத் தெரிவித்தார்.

## இலங்கையில் மீண்டும் தேர்தல் அறிவிக்கப்படலாம் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகளால் நிலைகுலைந்து போயுள்ள இலங்கை அரசியலை, மீண்டும் சீர் செய்யும் நடவடிக்கைகள் மிகவும் சிரமமாகவே இருக்கப்போவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளால் எழுந்துள்ள ஸ்திரமற்ற தன்மையால், பணச்சந்தை வீழ்ச்சி கண்டுள்ளதுடன், வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தங்களது உறுதியான முடிவுகளிலிருந்து பின்வாங்க ஆரம்பித்துள்ளார்கள்.

இந்நிலையில், ஜனாதிபதி தனது அறுதிப்பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் உறுதிசெய்ய முடியாதநிலை தோன்றியுள்ளதால், தனது வலிமையுள்ள ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்தி, நாடாளுமன்றத்தைக் கலைத்து, மீண்டும் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசியல் அவதானிகளின் கருத்துப்படி, தேர்தல் மீண்டும் நடாத்தப்படும் பட்சத்தில், இலங்கை அரசியலை நிர்ணயிக்கும் பலம் வாய்ந்த ஒரு சத்தியாக விடுதலைப் புலிகள் உருவாகும் வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதாகக் கருத்துக் கூறப்படுகிறது.

சிங்களத் தலைமைகளும், முஸ்லிம் தலைமைகளும் குழம்பிச் சிதறுண்டு கருத்துப்பேதத்தில் பிளவுண்டிருக்கும்நிலையில், தமிழ்த் தலைமை தற்போது சீராக ஒரு குடையின் கீழ் இருப்பதனால், விடுதலைப் புலிகளுக்கு வாய்ப்பான காலமாக தேர்தல் களம் அமையும் என்று, அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

## பேச்சுவார்த்தைக்கான நிலைமையை உருவாக்குவது அவசியமென விமான நிலையத்தில் ரணில் கருத்து

தற்போது ஏற்பட்டுள்ள நிலமை, சமாதானத்தை முன்னெடுத்து செல்ல முடியுமா என்ற கேள்விக்குறியை தோற்றுவித்துள்ளது. பேச்சுவார்த்தைக்கான நிலமையைத் தோற்றுவிக்கவேண்டியது தற்போதைய தேவையாகும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - அமெரிக்க விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியபோது, விமானநிலையத்தில் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும்போது, தெரிவித்தார்.

அவர் தனதுரையில் - எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கும் விவசாயிகளுக்கும் பல நிவாரணங்களை வழங்கத் திட்டமிட்டிருந்தோம். ஆனால், தற்போது நாடாளுமன்றம் ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது.

குறித்த காலத்தில் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தால்தான், எமக்கு கிடைக்கவேண்டிய வெளிநாட்டு உதவிகள் கிடைக்குமெனவும் தெரிவித்தார்.

## தொடர்பாடல் அமைச்சின் தலைமை மாற்றம் அரசாங்க கருமங்களில் பெரும் குழப்பங்கள்

தகவல் தொழில்நுட்பத் துறைக்குப் பொறுப்பாகவுள்ள சுரங்கா சேனநாயக்க, திடீரென எதுவித காரணமும் சொல்லாது தனது பதவியைவிட்டு வெளியேறியதால், மக்கள் தொடர்பாடல் அமைச்சில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஐ.தே.மு.கட்சியின் ஆதரவாளர்களான ஐ.ரி.என். பொறுப்பதிகாரிகள்- சந்தான திலகரட்ன, ரவிமால் ஹடுவெல்ல போன்றோரும் உடனடியாக வேறு இலாகாக்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருப்பதால், மக்கள் தொடர்பாடல் அமைச்சு முற்று முழுதாக ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் கைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கிடையில், லேக் ஹவுசில் கடமையிலிருந்த - லேக் ஹவுஸ் அதிபர் நளின் லடுவஹெட்டி, பிரதம ஆசிரியர் பந்துல பத்மகுமார ஆகியோர், எதுவித தகவலும் கொடுக்காது, திடீரென பின்கதவால் ஓடி மறைந்து விட்டார்கள் என்றும், இதனால், லேக் ஹவுசில் பெரும் குழப்பம் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

புதிய லேக் ஹவுஸ் அதிபர் கேசரலால் குணசேகர - தனது பதவியைப் பொறுப்பேற்க - லேக் ஹவுசிற்குள் நுழைந்தபோது, அங்கே பெரும் அல்லோலகல்லோலமாக ஊழியர்கள் ஓடித்திரிந்ததாகவும், பொறுப்பான பதவிகளிலுள்ள அனைவரும் பின்கதவால் ஓடித்தப்பியதால், புதிய அதிபர் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ள இயலாது தடுமாறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சுகாதாரச் சீர்கேடுகளைத் தவிர்க்க மக்களின் ஒத்துழைப்பே அவசியம்

## நல்லூர் பிரதேசசபைச் செயலாளர்

மழைகாலத்தில் சுகாதார சீர்கேடுகளைத் தவிர்க்க மக்கள் ஒத்துழைக்கவேண்டும் என நல்லூர் பிரதேசசபையின் செயலாளர் செ. செல்வரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில், எமது பிரதேசத்தில் சுகாதாரத்தினைப் பாதுகாக்க வேண்டிய பாரியபொறுப்பு எமக்குண்டு. எனினும், எம்மிடம் சுகாதாரத் தொழிலாளர்கள் போதியளவு இல்லாது இருப்பதால், பொதுமக்களின் உதவி இன்றியமையாததாகவுள்ளது.

பொதுமக்கள் முதலில் தமது வீடுகள்,காணிகளில் உள்ள - புல், பூண்டுகளை அழித்தும், நீர்தேங்கக் கூடிய இடங்களில் நுளம்புகள் பெருகுவதைத் தடுத்துக் கொள்ள வேண்டும்.

தமது காணிகள் மற்றும் வீடுகளில் சேரக்கூடிய கழிவுகளை - வீதிகளில் வீசாது, தமது காணிகளுக்குள்ளேயே வெட்டிப்புதைக்க வேண்டும்.

நுளம்பு அழிப்பு மருந்து அடிப்பதற்கு - தெளிகருவிகள் மற்றும் ஆட்கள் தொகை என்பன போதியதாக இல்லாமலுள்ளது.

எனினும், இருக்கும் வளத்தினைக்கொண்டு, சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். எனினும், மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதாகவுள்ளது. எனவும் அவர் தெரிவித்தார். (ப)

# வளைகுடா யுத்தகாலத்திற்குரிய நஷ்டஈடு வழங்கப்படவில்லை

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

வளைகுடா யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு சவுதியிலிருந்து திரும்பி அனுப்பப்பட்டோருக்கு - இதுவரையில் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனக்கோரி, மூவர் - யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குருநகரைச் சேர்ந்த ஜேசுதாஸ் லூர்த்துநாயகி, கஸ்பர் அந்தோனிப்பிள்ளை மற்றும் உரும்பிராயைச் சேர்ந்த தர்மலிங்கம் தவேந்திரன் ஆகிய மூவருமே தமது நஷ்டஈட்டுக் கொடுப்பனவை வழங்காது, தமது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக முறையிட்டுள்ளனர்.

இதேபோல், மேலும் இருவர் கடந்த மாதமும் முறைப்பாடு தெரிவித்ததாகவும், யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரி து.சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# இலவச கணினி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்புடன், இணுவில் கிழக்கு இளைஞர் கழகம் நடத்திவரும் இலவச கணினி வகுப்புக்களின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த புதன்கிழமை ஆரம்பமான இந்தக் கணனி வகுப்பில், ஆர்வமுள்ள அனைவரும் கலந்து பயன்பெறமுடியுமெனக் கணினி வகுப்புக்களின் இணைப்பாளர் ஞா. ஞானசொரூபன் தெரிவித்தார்.

அதேவேளை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து, இளைஞர் கழகத்தினர் இலவச ஆங்கில வகுப்பொன்றையும் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நுண்கலைப்பீட மாணவர்கள் பரீட்சைகளைப் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்- பல்கலைக்கழக நுண்கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்கள் - பரீட்சை மண்டபத்தில் இருந்து வெளிநடப்புச் செய்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது - யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்குரிய அரையாண்டுப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. விரிவுரைகளுக்கு ஒழுங்காகச் சமூகமளித்த மாணவர்களையே பரீட்சை எழுதப் பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. இதனால், அநேக மாணவர்கள் பரீட்சை எழுத முடியாத நிலமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறி - இரண்டாம் வருட மாணவர்களுக்கான அரையாண்டுப் பரீட்சைகள் ஆரம்பமாகியுள்ளன. விரிவுரைகளுக்கு ஒழுங்காகச் சமுகமளித்த மாணவர்கள் மட்டும் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டுள்ளனர். பரீட்சை எழுத அனுமதி மறுக்கப்பட்ட ஏனைய மாணவர்கள் - பரீட்சை மண்டபத்திற்கு வெளியே நின்றுள்ளனர். இறுதிநேரம்வரை இவர்களைப் பரீட்சை எழுதப் பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதிக்கவில்லை.

இதனால், பரீட்சை மண்டபத்தினுள் இருந்த மாணவர்கள்- வெளியே நின்ற மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து, பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியேறியுள்ளனர். இதனால், பரீட்சைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களின் வரவுக் கணிப்பில் சிலருக்குப் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக - மாணவர் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. விரிவுரைகளுக்கு 75 வீதம் சமுகமளித்த மாணவர்களே பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-91)

# மதுபோதையில் முறைப்பாடுசெய்யவந்த வர்த்தகர் ஒருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்ய வந்த ஒருவர் - பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

யாழ். பொலிஸ் நிலையத்திற்கு நேற்று முன்தினம் காலை முறைப்பாடு செய்ய வந்த வர்த்தகர் ஒருவர் - மதுபோதையில் இருந்ததால் பொலிஸார் முறைபபாட்டை ஏற்கமறுத்துள்ளனர்.

இதனால், கோபம்கொண்ட குறித்த நபர் - பொலிஸாரைத் தகாத வார்த்தைகளால் திட்டியும், சம்மந்தப்பட்ட பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் சத்தமிட்டுள்ளார். இரு பொலிஸாரின் இலக்கங்களையும் குறிப்பெடுத்துள்ளார்.

இதனால், இவரைக் கைதுசெய்த பொலிஸார் - யாழ்.நீதிமன்றல் நீதிபதி இ.த.விக்னராஜாவின் முன் ஆஜரபடுத்தினர். இவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, நீதிபதி 1000 ரூபா தண்டப்பணம் கட்டும்படி உத்தரவிட்டு, குறித்த நபரை விடுதலை செய்தார்

குருநாகல் பகுதியில் இருந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்காகவே இவர் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளார். இங்கு ஏற்பட்ட பணக்கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏற்பட்ட தகராறு தொடர்பாக, பொலிஸில் முறைப்பாடு செய்ய வந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச)

# திருடர்களைக் காட்டிக்கொடுத்த சிறுவனைக் காணவில்லை



மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களைத் திருடியவர்களைக் காட்டிக்கொடுத்த சிறுவன் காணாமல் போயுள்ளார். இந்தச் சம்பவம் மல்லாவிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார்சைக்கிள் ஒன்றின் உதிரிப்பாகங்களைத் திருடிக்கொண்டிருந்த இரு திருட்டுப் பேர்வழிகளை - கிராமசேவையாளரிடம் காட்டிக் கொடுத்த மல்லாவியைச் சேர்ந்த கந்தராசா தவசீலம் (வயது14) எனும் சிறுவனே காணாமற்போனவராவார்.

திருட்டில் ஈடுபட்ட இருவரையும், விசாரணைக்கு வருமாறு எழுதப்பட்ட அழைப்புக் கடிதத்தை - இந்தச் சிறுவனிடமே கிராமசேவையாளர் கொடுத்தனுப்பியுள்ளார். அதன் பின்னரே சிறுவன் காணாமல் போயுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்பொழுது கிராமசேவையாளரையும், திருட்டில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கபட்ட இரு சந்தேகநபர்களையும் - தமிழீழ காவற்துறையினர் கைதுசெய்துள்ளனர்.

அதேவேளை, காணாமல்போன சிறுவன் யாழ்.மாவட்டத்தில் உலாவுவதாகத் தனக்குத் தகவல் கிடைத்துள்ளதாகச் சிறுவனின் தந்தை தெரிவித்துள்ளார். இது தொடர்பாகத் தகவல் தெரிந்தவர்கள் 0602 299257 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : ச.டிசாந்
முகவரி : குருத்து வீதி, தையிட்டி.

ஆறாவது அகவையில்



பெயர் : அ.வசந்தராஜ்
முகவரி : நாகர் கோவில் கிழக்கு, நாகர்கோவில்.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : ப.தர்மிளா
முகவரி : மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

# சின்னஞ்சிறு செய்திகள்

## கணினி அறை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சன்மார்க்க வித்தியாசாலை - கணினி அறைத்திறப்பு விழா, நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் எஸ்.நடராஜலிங்கம் தலைமையில் மு.ப 10 மணியளவில் நடைபெறும் இந்த நிகழ்வில்- ஐ.ஐ.எஸ். நிறுவன இயக்குநர் கே.விக்னேஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகு வழங்கிவரும், திரைப்படக்காட்சித் தொடரில் - கோவிந் நிஹலானியின் நெறியாள்கையில் உருவான "பார்ட்டி" (விருந்து) என்னும் ஹிந்தித் திரைப்படம் நாளை காலை 10 மணிக்குப் புவியியற்துறை மண்டபத்தில் தமிழ் உபதலைப்புக்களுடன் காண்பிக்கப் படவுள்ளது.

## அதிபர்கள் கௌரவிப்பு

நல்லூர் கல்விக்கோட்டத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற அதிபர்களைக் கௌரவிக்கும் நிகழ்வொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் காலை 11.30 மணிக்கு இவ்வைபவம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது, வண்ணை வைத்திலிங்கம் வித்தியாசாலையின் முன்னாள் அதிபர் க.செல்வநாயகம், நல்லூர் ஸ்தான சி.சி.த.க. வித்தியாலய முன்னாள் அதிபர் க.நாகராசா, பெரியபுலம் வித்தியா சாலை முன்னாள் அதிபர் செல்வி. க.கந்தையா ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ச)

## பழைய மாணவர் சங்கக்கூட்டம்

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன தமிழ்க்கலவன் பாடசாலையின் - பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை நடைபெறவுளளது. இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி, பாடசாலை அதிபர் எஸ்சோமேஸ்வரம்பிள்ளை கேட்டுக்கொண்டுள்ளார். (ச)

## 48 பக்கங்கள் மட்டுமே...!




நன்றி: ரிங்கிள்

## கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

### சொல் விளையாட்டு

கீழே சில சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள எழுத்துக்களில், ஏதாவது ஒன்றை மட்டும் நீக்கிவிட்டு, வேறொரு சொல்லை அமைக்க முடியும். இவ்வாறு சில சொற்களிலிருந்து, ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களை அமைக்கமுடியும். உங்களுக்கு உதவுவதற்காக, அடைப்புக்குள் ஒரு சொல் தரப்படும். இதைப் பயன்படுத்தி - நீங்கள் விடையைக் கண்டுபிடிக்க வேண்டும். அடைப்புக்குள் இருக்கும் சொல், ஏதோ ஒரு வகையில் விடையோடு தொடர்புடையதாக இருக்கும். உதாரணம் -

சாமந்தி (விலங்கு)
விடை - மந்தி

1. சாமரம் (இருள்)
2. வாகனம் (நீலம்)
3. கானகம் (பாட்டு)
4. விலங்கு (ஒதுங்கு)
5. மகுடம் (பாத்திரம்)
6. தாயகம் (விளையாட்டு)
7. நாடகம் (ஊர்வன)

**சென்றவார விடைகள்**

1.

| | | |
|---|---|---|
| 6 | 11 | 4 |
| 5 | 7 | 9 |
| 10 | 3 | 8 |

2. 'ட' - கடல்
பஸ் நடத்துநர் பூனை என்ற படியால்தான் - எலி ஓடியது.

## தாய் மொழி எது?



ஒருநாள் - ஒரு ராஜாவைப் பாாக்க ஒரு புலவர் வந்தார். அவர் பல மொழிகள் கற்றவர். ராஜாவிடம் வந்து, பல மொழிகளில் பேசினார். ராஜா திகைத்துப்போனார். ராஜா அந்தப் புலவரிடம் - 'பல மொழிகள் தெரிந்து வைத்திருக்கிறீர்கள், உங்களுடைய தாய்மொழி எது, தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன், சொல்லுங்கள் என்றார். புலவருக்கு தலைக்கனம் அதிகம். எனவே, அவர் தனனுடைய தாய்மொழி எது என்று சொல்ல மறுத்துவிட்டார். ராஜாவுக்குக் கவலையாகிவிட்டது. உடனே ராஜா - மந்திரியிடம் சொன்னார், 'இந்தப் புலவருக்கு இவ்வளவு மொழிகள் தெரிந்திருக்கிறது, அவருடைய தாய்மொழி எது என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லையே' -என்றார்.

மந்திரி - ராஜாவைப் பார்த்துச் சொன்னார் 'கவலைப்படாதீர்கள் ராஜா, இன்று இரவுக்குள் புலவருடைய தாய்மொழி எதுவென்று கண்டுபிடித்துச் சொல்கிறேன்' -என்று மந்திரி சொன்னார்.

அன்றிரவு ராஜாவும், மந்திரியும் - புலவர் இருக்கும் இடத்தைத தேடிப்போனார்கள். புலவர் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். மந்திரி ஒரு பெரிய கட்டையை எடுத்தார். நித்திரையில் ஆழ்ந்திருந்த புலவரின் காலில் ஒரு போடு போட்டார். புலவர் 'ஆ.... அய்யோ.... அம்மா' என்று கத்திக்கொண்டு, எழுந்து பார்த்தார்.

மந்திரி - ராஜாவிடம், சந்தோஷத்துடன் சொன்னார் 'ராஜா, கண்டுபிடித்து விட்டேன் புலவருடைய தாய்மொழி தமிழ்' என்றார்.

## சொல் என்ன சொல்

குழந்தை பேசும் சொல் எது?
- மழலைச்சொல்.
தாய் சொல்லும் சொல் எது?
- அன்புச்சொல்.
எதிரி பேசும் சொல் எது?
- வன்சொல்.
பேசக்கூடிய சொல் எது?
- இன்சொல்.
ஒன்றிற்கு எதிரான சொல் எது?
- எதிர்ச்சொல்.
ஒன்றிற்கு ஒத்திருக்கும் சொல் எது?
- ஒத்தசொல்.
அன்பாய்ப் பேசும் சொல் எது?
- அருமைச்சொல்.
வாயால் பேசும் சொல் எது?
- வாய்ச்சொல்.
பேச்சுக்குச் சொல்லும் சொல் எது?
- பேச்சுச்சொல்
இனிமை தரும் சொல் எது?
- இனிமைச்சொல்.
அன்புள்ள சொல் எது?
- அன்புச்சொல்.
வினையாய்க்கூறும் சொல் எது?
- வினைச்சொல்.
மொழியைக் கூறும் சொல் எது?
- மொழிச் சொல்.
தமிழன் பேசும் சொல் எது?
- தமிழ்ச்சொல்.

கா.மேரிஅல்பெற்றா.

இங்கே மடிக்கவும்



## தந்திரத்தால் பூனையைக் கொன்ற எலிகள்

*(சென்றவாரத் தொடர்ச்சி....)*

"கடைசிவரையும் நான் உங்களோடு வரமாட்டன்." நான் எப்பாடுபட்டாவது, பரமேஸ்வரன் வீட்டுப் பூனையைக் கொன்றே தீருவேன்" என்று கோபமாகச் சொன்னது மகன் எலி.

"வாலிப மிடுக்கிலை ஆராயாமல் கதைக்கிறாய்", உன்னாலை முடியாது. பரமேஸ்வரன் வீட்டுப்பூனை - இப்பொழுது



இந்தப் பக்கமாகவும் வருகிறது. தற்செயலாய் நாங்கள் இருக்கிறதைக் கண்டால், ஆபத்து" என்றது தாய் எலி.

"நெடுகப் பயப்பட்டுக்கொண்டிருந்தால், நாம் வாழமுடியாது. நான் பரமேஸ்வரன் வீட்டுக்குப் போய், நிலைமையைப் பார்த்து இறங்கி, ஏதாவது சாப்பிடுவதற்குக் கொண்டுவாறன்" எனப் புறப்பட்டது மகன் எலி.

"நானும் உன்னுடன் வருகிறேன் அண்ணா" எனக் கூறி, அதன் தம்பி எலி புறப்பட்டது.

"கவனம் பிள்ளைகள், கெதியாய் வந்திடுங்கோ" என்றது தாய் எலி.

இருவரும் மெதுவாகப் பரமேஸ்வரன் வீட்டைநோக்கிச் சென்றன. கூரை முகட்டில் பூனை படுத்திருந்தது. அதனைக் கண்ட எலிகள் இரண்டும் - முற்றத்தில் நின்ற தென்னை மரத்தில் ஏறின.

மணி முற்றத்திலிருந்த வேப்பமரத்தின் கீழ் படுத்திருந்தது. தென்னை மரத்திலிருந்த அண்ணா எலி - மெதுவாக "மணி" என்று அழைத்தது.

நிமிர்ந்து பார்த்த மணி, எலிகளைக் கண்டதும் குரைத்தது. "மணி அண்ணா, நாங்கள் இருவரும் உங்கள் வீட்டுக் கூரையில்தான் வாழ்ந்து வந்தோம். தற்பொழுது, பூனை எங்களைப் பிடிப்பதால், பக்கத்துவீட்டுக் கூரையில் வசிக்கிறோம். அங்கு மனிதர்கள் யாரும் இல்லாததால், இரண்டு நாட்களாக நாங்கள் பட்டினி கிடக்கிறோம். தயவுசெய்து எமக்கு உதவி செய்ய முடியுமா?"

"உனக்கு நான் என்ன உதவி செய்யவேண்டும்." என்று கேட்டது மணி.

"அந்தப் பூனையைக் கொல்லவேண்டும்".

ஐயையோ! அது எனது நண்பன். அதனுடன் நான் தினமும் விளையாடுவேன். எனது எஜமானான கஜேந்திரன் அதை மிகவும் அன்பாக வளர்க்கின்றான். அவனுக்குத் துரோகம் செய்ய என்னால் முடியாது. உடனே நீ இங்கிருந்து ஓடிப்போ. இல்லாவிட்டால், பூனையைக் கூப்பிடுவேன்" என்றது மணி.

அண்ணா எலிக்குக் கவலையாக இருந்தது. அத்துடன், பசித்தது. அதனால், யோசிக்க முடியவில்லை. கவலையோடு வீட்டிற்குத் திரும்பியது.

திடீரென்று "கீக்கீ" என்று தம்பி எலி அலறும் சத்தம்கேட்டது.

*(தொடரும்.....)*



# சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### சிங்கப்பூர்


கோ சோக் டோங்

தலைநகர் - சிங்கப்பூர் நகரம்.
பரப்பளவு - 616.6 ச.கி மீற்றர்.
நாணயம் - சிங்கப்பூர் டொலர்.
மொழி - மலாய், சீனம், தமிழ், ஆங்கிலம்
சமயம் - பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம்,
சராசரி ஆயுள் - ஆண் 75.1. பெண் 79.5.

தென்கிழக்கு ஆசிய நாடுகளிடையே, முன்னேறிய நாடுகளில் சிங்கப்பூர் முதலிடம் வகிக்கிறது. இந்த நாடு ஒரு சிறிய தீவுநாடாகும். 50 சிறிய தீவு களையும், பெரியதீவு மலேஷியாவுடன் குறுக்குப் பாதையொன்றி னூடாக இணைக்கப்பட்டுள்ளது. இந்தத் தீவுகள் பலவற்றில் மனிதர்கள் எவரும் வசிப்பதில்லை. சிங்கப்பூரில் நிலப்பரப்பு மிகவும் குறைவாக இருப்பதால், உயர்ந்த தொடர்மாடிக் கட்டடங்களில், மககள் வசிக்கிறார்கள். இந்த நாட்டின் பெரும்பகுதி நகரமய மானவை.

தென்கிழக்கு ஆசியாவின், நவீனமயமாக்கப்பட்ட முக்கிய துறைமுகங்களில் ஒன்றாக, இந்த நாடு விளங்குகின்றது. ஆசியாவிலேயே மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் இங்குள்ளது. சிங்கப்பூரில் 75 வீத மக்கள் - சீனமொழி பேசும் இனத்தவர்கள். மிகுதி 25 வீதமானவர்கள் மலேஷியர்களும், தமிழர்களும் ஆவார்கள். அதிகளவில் வெளிநாட்டவர்கள் இங்கு கடமைபுரிகின்றார்கள்.

1946 இல் பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற்றது. 1963 இல் மலேஷியக் கூட்டமைப்பில் இணைந்துகொண்டது. சிங்கப்பூரின் சட்டங்கள் மிகவும் இறுக்கமாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டில் எந்தவொரு மதத்திற்கோ, மொழிக்கோ முதலிடம் கொடுக்காமல், அனைத்து மக்களும் சமமாகக் கருதப்படுகின்றார்கள்.

இந்த நாட்டில் முக்கிய உற்பத்திகளாக, விவசாயம்-பன்றி, கோழி மற்றும் முட்டை, காய்கறிகள், பழங்கள், அழகுப்பூக்கள் உற்பத்திப் பொருட்களாக - கணினிகள், மின் மற்றும் மின்னணுப் பொருட்கள், தகவல் தொடர்பு கருவிகள், கப்பல் கட்டுதல் பெட்ரோலியப் பொருட்கள், இறப்பர் மற்றும் மரப் பொருட்கள் என்பன உற்பத்தி செய்யப் படுகிறன.



# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
தி.செந்தா
கற்கும் பாடசாலை :-
கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, பத்திரிகை வாசித்தல்,
ஓவியம் வரைதல்.



முழுப்பெயர் :-
கி.புவி
கற்கும் பாடசாலை :-
யாழ்.புனித அந்தோனியார் கல்லூரி
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, பத்திரிகை வாசித்தல்,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- றொ.திவ்யாபாலினி
கற்கும் பாடசாலை :-
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, கதைப் புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர் :- சி.சரணிகா
கற்கும் பாடசாலை :-
யாழ்.அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, முத்திரை சேகரித்தல்,
தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர்:- இ.யசீந்தன்
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட், ஓவியம் வரைதல்

முழுப்பெயர்:- கு.பிரணவன்
கற்கும் பாடசாலை :-
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
பொது அறிவு, விடுகதைகள், புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர்:- ந.மீரா
கற்கும் பாடசாலை :-
யாழ்.இந்து மகளிர் கல்லூரி
கற்கும் தரம் : 8
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல்,
கவிதை.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம் விண்ணப்பம்

முழுப் பெயர் :......................................
கற்கும் பாடசாலை :......................................
கற்கும் தரம் :......................................
வீட்டு முகவரி :......................................
பிறந்த திகதி :......................................
ஆர்வமுள்ள துறைகள் :......................................
......................................

.................. ..................
திகதி ஒப்பம்

.................................. ..................................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## தெரிந்து கொள்ளுங்கள்

கோழிக்குஞ்சை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். முட்டையி லிருந்து குஞ்சு வெளிவந்த பின்புதான் சுவாசிக்கிறது என்றா நினைக்கிறீர்கள்?

இல்லை. கோழிக்குஞ்சு முட்டைக்குள் இருக்கும் போதே சுவாசிக்கத் தொடங்கி விடுகிறது. பறவையின் முட்டை ஓட்டினுள் சின்னச்சின்ன துளைகள் நிறைய இருப்பதனால், காற்று முட்டைக்குள் நிரம்பி விடுகின்றது. அதனை சுவாசித்து வளரும் குஞ்சு, முழு வளர்ச்சியடைந்ததுடன், முட்டை ஓட்டினை அலகால் உடைத்துக்கொண்டு வெளிவந்து விடுகிறது.

--- இங்கே மடிக்கவும் ---



## ஓலைப்பூ, இலைப்பூ



ஓலைப்பூ



இலைப்பூ

மலர்களைக் கண்டு மயங்காத மாந்தர் இந்தவுலகில் இல்லை. எத்தனையோ பூக்களைப் பார்த்திருப்பீர்கள். ஆனால், அந்தப் பூக்களிலேயே தனித்திருக்கும் இருவகை பூக்களைப் பற்றி உங்களுக்கு தெரியுமா? இலைப்பு என்றும், ஓலைப் பூ என்றும் அவற்றைச் சொல்வார்கள்.
இலைப் பூ - மருக்கொழுந்து
ஓலைப்பூ - தாழம்பு

## உங்கள் சிந்தனைக்கு...

எவனெவன் சிறகுகளுக்கு எவ்வளவு வலுவுண்டோ, அவன் அவன் அவ்வளவு உயரம் பறந்தே தீருவான் சொன்ன சொல்லையும், எறிந்த கல்லையும் திரும்பப் பெறமுடியாது.

பக்தியோடு பிராத்தனை செய். ஆனால், சுத்தி யலைப் பலமாய் அடி.

சி.பிரணவி, தரம் - 6
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

## அகராதியை உருவாக்கியவர் யார்?

ஒருமொழியிலுள்ள சொற்களை - எல்லாம் அவற்றின் அகர வரிசைப்படி அமைத்துப் பொருள்கூறும் நூலை அகராதி (Dictionary) என்கிறோம். ஆரம்பத்தில் உருவாக்கிய அகராதிகள் கடினமான சொற்களுக்கு மட்டுமே பொருள்கூறி வந்தன.

தமிழில் முதன்முதலாக 'அகராதி நிகண்டு' ஒன்று 1594 ஆம் ஆண்டு வெளியானது. இதனை சிதம்பர ரேவண சித்தர் என்பவர் செய்யுள் நடையில், சொற்களஞ்சியமாக உருவாக்கி இருந்தார். செய்யுள் நடையை விட்டு, மேலைநாட்டு உரைநடை முறையில் தமிழ் அகராதியை உருவாக்கிய பெருமை - 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரமாமுனிவரைச் சாரும். இந்த அகராதி 'சதுரகராதி' என வழங் கப்பட்டது.

1779 இல் தமிழ் - ஆங்கில அகராதியை இரு ஜேர்மனிய சாட்சிபகரும் ஊழியர்கள் வெளியிட்டனர். ஆங்கில மொழியில் முதல் அகராதியை உருவாக்கிய பெருமை - ராபர்ட் காவ்ட்ரே என்னும் பாடசாலை ஆசிரியரைச் சாரும். இவர் 1604 இல் வெளியிட்ட அகராதி - 3000 கடினமான ஆங்கிலச் சொற்களுக்கு மட்டுமே பொருள் விளக்குவதாக அமைந்திருந்தது.

இடைக்காலத்தில் வாழ்ந்த கிரேக்கர்களும், ரோமர்களும் தான் முதலில் அகராதியை உருவாக்கியவர்கள் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன.

இன்று அகராதியை உருவாக்கும் பணி, சொற்களஞ்சியக் கலையாகவே மாறி இருக்கிறது. அகராதி உருவாக்கும் பணியில், கணினிப்பொறியின் சேவையும் இன்று நாடப்படுகின்றது. 'அகரமுதலி' எனவும் அகராதி வழங்கப்படுகின்றது.

## விடுகதைகள்

1. இரத்தத்திலே வளர்வது, இரத்தம் இல்லாதது அது என்ன?
2. தாவிஓடி வந்தாலும், தாகம் தீர்க்கமாட்டான் அவன் யார்?
3. கிட்டத் தெரிவான், நெருங்க நெருங்க எட்டிப் போவான். அவன் யார்
4. காலை, மாலை நெட்டை - மற்ற நேரம் குட்டை அது என்ன?
5. அறைகள் அறுநூறு, அத்தனையும் கைக்குள் அடக்கம். அது என்ன?

### விடைகள்

1. பேன்.
2. கடல்.
3. வானம்.
4. நிழல்.
5. தேன்கூடு.

பு.ஜனனி
தரம் - 8
கனகரத்தினம் மகா வித்தியாலயம்.

## நீர் அருந்தாத உயிர்

அவுஸ்திரேலியாவில் காணப்படும் கோலா கரடி என்ற விலங்கு நீரே குடிப்பதில்லை. இதன் உணவு யூக்கலிப்ரஸ் மர இலைகள் மட்டும்தான். அந்த இலைகள் ஈரமாக இருந்தால்கூட, கோலா கரடி அந்த இலைகளைத் தினமாதாம். பார்த்தீர்களா? நீங்கள் எப்படி?

## சிந்தனைத் துளிகள்

1. ஒரு நல்ல தாய் - நூறு ஆசிரியர்களுக்கு ஒப்பானவர்.
2. சொற்கள் வாயிலிருந்து வரக்கூடாது, இதயத்தில் இருந்து வரவேண்டும்.
3. அறிவை மேலும் மேலும் கூர்மையாக்கிக்கொள்ளப் பயன்படும் கருவி கல்வி.
4. மனிதன் சிரிப்பது - மற்றவர்களைப் பார்த்து, அழுவது - தன்னைப் பார்த்து.

சி.கபில்ராஜ் , தரம் - 8
மகாஜனாக் கல்லூரி.

## உங்கள் கைவண்ணம்



க.துர்மதா
தரம்- 10
யாழ். இந்து மகளிர் கல்லூரி



ஆர்.லோஜிதன்



வீ.டினேஸ்கரன்
தரம் - 8
வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.*
-திருக்குறள்.

## நமது நோக்கு

### அரசியற் குழப்பத்தின் எதிரொலிகள்

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அதிகார அரசியல் ஆதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடான அதிரடி நடவடிக்கைகளால், கடந்த மூன்று தினங்களாக அரசியல் மற்றும் இராஜதந்திர வட்டாரங்களில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக ஏற்பட்டுள்ள எதிரொலிகள் சிறிலங்காவில் பல்வேறு வகையான தாக்கங்களை ஏற்படுத்தி வருவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பொதுவாக, சமாதானத்தை வலியுறுத்தி பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றை எடுப்பதற்கு, பன்முகப்பட்ட ஆதரவை வழங்கி அமைதி முயற்சிகளுக்குப் பக்கபலமாக இயங்கிவந்த சிறிலங்காவின் நலனில் அக்கறை கொண்டுள்ள நாடுகள் பலவும், சந்திரிகாவின் இந்தக் குறுகிய அரசியல் இலக்கினை கொண்ட செயற்பாடுகளால் அதிருப்தி அடைந்துள்ளமையை அவைகள் வெளியிட்ட அறிக்கைகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி, இந்த நடவடிக்கை சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய ஒன்றென்று விமர்சித்துள்ள அதேநேரம், ரணில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை சந்தித்தபின், அமெரிக்கத் தரப்பிலிருந்து வெளியான அறிக்கையில், அமெரிக்கா, ரணில் அரசுக்கு ஆதரவை வெளிப்படையாகவே தெரிவித்திருப்பதுடன், சமாதான முயற்சிகளுக்கான தமது ஆதரவை மீண்டும் ஒரு தடவை உறுதி செய்துள்ளமையானது, சந்திரிகாவின் நடவடிக்கைகளுக்குக் கிடைத்த உடனடித் தோல்வியாகும்.

இதே தன்மையிலான அறிக்கையொன்றினை ஐரோப்பிய ஒன்றியமும் வெளியிட்டுள்ளது. இதில், சந்திரிகாவின் இந்தத் திடீர் நடவடிக்கையானது, சமாதான முன்னெடுப்புக்களை வெகுவாகப் பாதித்துவிடுமென்று கவலை தெரிவித்துள்ளது.

சீனா, ஜப்பான், நோர்வே, அவுஸ்திரேலியா, கனடா உடபட பல நாடுகள் ஜனாதிபதியின் இந்தத் திடீர் நடவடிக்கையால் கடும் அதிர்ச்சியடைந்துள்ளதுடன், ஜனாதிபதியும் அரசும் பிரச்சினைகளைப் பேசித்தீர்ப்பதன் மூலம், சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை நீக்கி பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கான வழிமுறைகளை காணவேண்டுமென வலியுறுத்தியுள்ளன.

சந்திரிகாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டது என்று வர்ணிக்கப்படும் இந்தியா கூட, இந்த நடவடிக்கை குறித்து கருத்து வெளியிடுகையில், இலங்கையில் நடப்பவற்றை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும், அங்கு உருவாகியுள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு உடன் பேச்சுக்கள் மூலம் பரிகாரம் காணுமாறு அறிவுறுத்தியுள்ளது.

ஆக வடக்கு - கிழக்கில் சிங்கள இயக்கம், ஜே.வி. பி, சிஹல உறுமய, ஈ.பி.டி.பி. போன்ற உள்ளூர் சில்லறை அரசியல் குழுக்கள் மட்டுமே, சந்திரிகாவின் இந்த நடவடிக்கையை வரவேற்றுப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் ஏற்கனவே கடந்த பல மாதங்களாகவே ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகார வலுவைப் பயன்படுத்தி, ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று அவருக்கு வலியுறுத்தி அழுத்தம் கொடுத்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் பார்க்கும்போது, ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் அங்கீகாரமோ, ஆதரவோ வழங்கவில்லை என்பது தெளிவாகின்றது. எனவே, இதனை ராஜரீக ரீதியில் அவருக்கு கிடைத்த தோல்வி என்றே கூற வேண்டும்.

அடுதது சிறிலங்காவல் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களால் அதிருப்தி அடைந்துள்ள இங்கிலாந்து - அவுஸ்ரேலியா போன்ற நாடுகள், தம் நாட்டவரை இலங்கைக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளன. இதன் காரணமாக விரைவில் இங்கு வருகை தரவிருக்கும் குறிப்பிட்ட இரு நாட்டினதும் கிரிக்கெட் அணிகள், தமது விஜயத்தை ரத்துச் செய்யும் நிலைக்கு வந்துள்ளன. இதன் காரணமாக, இலங்கை பலகோடி ரூபா வருமானத்தை இழக்கும் நிலையும் தோன்றியுள்ளது.

பங்குச் சந்தையில் ஏற்பட்டுள்ள திடீர் வீழ்ச்சி, முதலீட்டாளர்களை தமது முதலீட்டு முயற்சிகளிலிருந்து பின் வாங்க வைத்துள்ளதாகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்கான இரண்டாம் கட்ட கடனுதவிகளை வழங்க தயக்கம் காட்டியுள்ளதுடன், தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு விரைந்து தீர்வுகாணுமாறு வலியுறுத்தியுமுள்ளது. எந்த வகையில் பார்த்தாலும், பாதுகாப்பு என்பதைக் காரணம் காட்டி சந்திரிகா மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் எதிரொலிகள், அவருக்கே பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருகின்றன. இதனை அவர் எவ்வாறு சமாளிக்கப் போகிறார்?

இந்த நிலையில் நேற்று அதிகாலையில் ரணில் நாடு திரும்பும் வேளையில், அவசரகால நிலையை சந்திரிகா நீக்கிவிட்டதாகச் செய்தி வந்தது. பின்னர் மாலையில் தான் அவசரகால நிலையை பிரகடனம் செய்யவில்லையே, பிறகு அதனை நீக்கவேண்டிய தேவை ஏன் ஏற்படப்போகிறது என அவரே கூறியதாகவும் செய்தி கூறியது.

ஆக சந்திரிகா தானும் குழம்பி, மற்றவர்களையும் குழப்ப முயல்கிறாரா? எதுவானலும் சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்துக்கு சந்திரிகா காரணமாகி விட்டார் என்பதில் இருவேறு கருத்து இருக்கமுடியாது.

இந்த நிலையில் நாடு திரும்பியுள்ள ரணில் என்ன செய்யப் போகிறார்?

ரணிலைச் சந்திரிகா எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறார்? பல கோடி ரூபா பெறுமதியான கேள்விகள் இவைகளேயாகும்.

## நாடும் நடப்பும்




செய்தி:
புலிகளின் இடைக்கால நிர்வாகசபை வரைபில் முஸ்லிம்கள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. - லக்ஸ்மன் கதிர்காமர் -

# 4 சதவீதமான குற்றவாளிகளே பொலிஸாரிடம் அகப்படுகின்றனர்!

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரதாபசிங்க

பொலிஸ்சேவையில் காணப்படும் வெற்றிடங்கள் அனைத்தும் - எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிரப்பப்பட்டுவிடும். பதவிஉயர்வு அடிப்படையிலேயே இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்று, பொலிஸ்சேவை ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபேசூரிய தெரிவித்தார்.

பொலிஸ் ஆணைக்குழு தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர்,

தற்போது சேவையிலுள்ளவர்களின் அபாரதிறமை அடிப்படையிலும், சேவைமூப்பின் அடிப்படையிலுமே பதவிஉயர்வுகள் வழங்கப்படும். அரசியலமைப்பின்படி - பொலிஸ்மா அதிபரைத் தவிர ஏனைய பொலிஸ் அதிகாரிகள் எவரையும் நியமனம்செய்யவும், இடமாற்றம் செய்யவும், ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வது உட்பட அதிகாரங்களும் பொலிஸ் ஆணைக்குழுவிற்கு கிடைக்கின்றது.

இதுவரை காலமும் அரசியல் செல்வாக்கிற்கு உட்பட்டு வந்த பொலிஸ்சேவை நடைமுறைகள் - பொலிஸ் ஆணைக்குழு தொடங்கியதும் முற்றாக ஒழிக்கப்பட்டுவிடும்.

இந்த நாட்டில் குற்றச்செயலில் ஈடுபடுவோரில் நான்கு சதவீதமானோரே கைதுசெய்யப்படுகிறார்கள். ஏனைய 96 சதவீதமானோர் பொலிஸாரின் கைகளில் சிக்காமல் சுதந்திரமாக நடமாடுகின்றனர். இதற்குக் காரணம் அரசியல் தலையீடுகளேயாகும்.

குற்றாவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்கப்பட்டால் இந்த நிலைமை ஏற்படாது. இதற்கான சட்டங்கள் கடுமையாக்கப்படவேண்டும் என்று தெரிவித்தார்.

# பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கலாநிதி கோபாலசுந்தரம்?

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கு கலாநிதி எம். கோபாலசுந்தரம் அரசியலமைப்புச் சபையால் சிபார்சு செய்யப்பட்டுள்ளார்.

கலாநிதி கோபாலசுந்தரத்தின் பெயரைச் சிபார்சுசெய்துள்ள அரசியலமைப்பு - இதுதொடர்பான அறிவித்தலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

கடந்த மூன்றாம் திகதி நடைபெற்ற அரசியலமைப்புச் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் இருந்து எஸ்.என்.ஈபேர்ட் இராஜினாமா செய்ததை தொடர்ந்தே, பெயரை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கோபால சுந்தரத்தின் அரசியலமைப்புச்சபை சிபார்சுசெய்துள்ளது.

## பனை தென்னைவள அபிவிருத்திச்சங்க

# பணியாளர்களின் பிள்ளைகளுக்கு கல்விவளர்ச்சிக்கு நிதியுதவியளிப்பு

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் - தனது பணியாளர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக நிதியுதவி அளித்துள்ளது. இந்த நிதியுதவி 60 பணியாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டது.

இந்தப் பிள்ளைகளுக்கு தலா ஆயிரம் ரூபாவீதம் கல்வி மேம்பாட்டுக்கான நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இதைவிட க.பொ.த.(சா.த), ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்த பணியாளர்களின் பிள்ளைகளுக்கு தலா இரண்டாயிரம் ரூபாவும் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பணியாளர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டை கருத்திற்கொண்டு ஐம்பதினாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பணியாளர்களின் பிள்ளைகளுக்கு இலவசச் சீருடைத் துணிகளும், பாடசாலை உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாகவும் சங்கத்தின் பொதுமுகாமையாளர் நி.பொ.ஜேசுராசா தெரிவித்தார். (ச)

## நெடுந்தீவிலுள்ள

# நன்னீர் கிணறுகளை இனங்காணுமாறு நீர்வழங்கல்வடிகாலமைப்பிடம் கோரிக்கை

நெடுந்தீவில் நன்னீர் (குடிநீர்) உள்ள இடங்களை இனங்கண்டு தருமாறு நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் கோரியுள்ளார்.

கோட்டைக்காடு, சறாப்பிட்டி, வெல்லை, மணற்கரை, குயிந்தா, சேயந்தறை, கிழக்கு முருகன்கோவிலடி, சிக்கிறியாம் பள்ளம், இராமன் விளைப்பு, பனங்காளி, நெருவினி, ஆகிய பகுதிகளை இதற்கெனத் தெரிவுசெய்து பரிசோதிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பாடசாலை, கோவில்கள் போன்றவற்றில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமுகமாக மதிப்பீட்டு அறிக்கைகள் தருமாறும், குறித்த சபையினரை கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# தரம் ஒன்பது மாணவர்களுக்கு மாகாணமட்ட பொதுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தால் நடத்தப்படும் தரம் 9 இற்கான மாகாணமட்டப் பொதுப்பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசாங்கப் பாடசாலைகளிலும் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சை முற்றிலும் இலவசமாகவே நடாத்தப்படும் என்றும், மாகாண கல்வித்திணைக்களங்களிலோ, அல்லது வலயக்கல்விப் பணிமனைகளிலோ கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# விவசாய அபிவிருத்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது

## அமைச்சர் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

விவசாயிகளின் அபிவிருத்தி தொடர்பாக எதிர்காலத்தில் அரசு எடுக்கவுள்ள நடவடிக்கைகளை அரசாங்கம் சமர்ப்பிக்கவிருந்த வரவு செலவுத் திட்டத்தின்மூலம் நடைமுறைப்படுத்தவிருந்ததாக, வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் ஓய்வூதியகாரர்களுக்கு 50 வீத சம்பள அதிகரிப்பை வழங்க எண்ணியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். ஜெயவர்த்தனபுர கோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ராஜகிரிய கோட்டை வீதியில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீஜெயவர்த்தனபுர கோட்டைப் பிரதேச செயலகத்தில் புதிய கட்டடம் நேற்று திறந்துவைக்கப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை - மகாண சபைகள் உள்ளூராட்சி அதிகார சபைகள் அமைச்சர் அலுக் அலுவிகார திறந்துவைத்தார். இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# கலைக்கூடலில் நுழைந்த கொலைக்கும்பல்:

## தலைநகரில் பேரினவாதிகளுக்கு விழுந்த அடி!

நாட்டைப் பிரிக்கப் பார்க்கிறார்கள். நாடு துண்டாடப்படுவதைத் தேசபக்தியுள்ளவர்கள் தடுத்து நிறுத்தவேண்டும். நாட்டைப் பாதுகாப்பதற்காக உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறோம்.

இப்படிக் கூச்சலிடுபவர்களில் சிஹல உறுமய என்ற இனவாதக் கட்சியும் முன்னணியில் நிற்கிறது.

உண்மையில் நாட்டைப் பிரிப்பதற்கும் சிங்கள - தமிழ் மக்கள் ஐக்கியப்படுவதைத் தடுப்பதிலும்- சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சிகள்தான் முனைப்பாக முன்னணியில் நிற்கின்றன.

இதற்குக் கடந்த மாதம் 29, 30 ஆம் திகதிளில், கொழும்பில் புதிய நகர மண்டபத்தில் நடந்த சிங்கள - தமிழ் கலைக்கூடலில் - சிஹல உறுமய இனவாதக் கட்சியினர் நடத்திய வன்முறைத் தாக்குதல் சம்பவம் சரியான சான்று.

'முகிழ்ந்து மலர்வோம் நம் சோதர உறவுடன்' என்ற தொனிப்பொருளினை மையமாக வைத்து, ஆரியக் (ஹிரு) குழுவினர் இந்த சிங்கள- தமிழ் கலைக்கூடலை ஏற்பாடு செய்திருந்தனர். வடக்கு, கிழக்கு, தென் மேற்கு, மத்திய என்று நாடெங்கிலுமிருந்து சிங்கள - தமிழ் படைப்பாளிகள் இந்த இரண்டுநாள் நிகழ்விலும் கலந்துகொள்ள வந்திருந்தனர்.

விடுதலைப் புலிகள் என்றாலே கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், கடத்தல்காரர்கள், சிங்களவர்களைப் பார்த்தாலே கொலை செய்துவிடுவார்கள் என்று - சிங்கள, ஆங்கில ஊடகங்கள் சில கொடூரமான கற்பனைகளைச் சித்தரித்து, சிங்கள மக்களைப் பயமுறுத்தி, மிரட்டி இனத்துவேஷத்தை அவர்கள் மனதில் விதைத்து, வேரூன்றச் செய்துள்ளன. அரசியல் ஆதிக்கத்துக்காகவும், அதிகார ஆசையினாலும் - அரசியல் அமைப்புக்கள் சில இந்த ஊடகங்களுக்கு துணைபோய், தாங்கள் அரசியல் லாபம் தேடிக் கொள்கின்றன.



ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு - மொழிவெறியைக் கிளப்பிவிடுவதுதான் ஒரேவழி என்று தீர்மானித்த சந்திரிகாவின் தகப்பன் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, 1950 களில் தாம் ஆட்சிக்கு வந்தால், சிங்களத்தை அரியாசனத்தில் ஏற்றுவதாகப் பேசிவந்தார். 1955 ஆம் ஆண்டில் பொதுத்தேர்தல் நெருங்கிவந்ததைத் தொடர்ந்து, தாம் ஆட்சிக்கு வந்தால் இருபத்துநான்கு மணிநேரத்தில் - சிங்களத்தை மட்டுமே நாட்டின் அரசகரும மொழியாக்குவதாக வாக்குறுதியளித்தார்.

சிங்களம் மட்டுமே அரச கரும மொழி என்ற பண்டாரநாயக்கவின் கூச்சல் - சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வளர்ந்து வருவது கண்ட ஐக்கிய தேசியக் கட்சியினரும், சிங்களம் மட்டுமே உத்தியோகமொழி என்று தங்கள் கட்சியின் களனி மாநாட்டில் கூடி முடி வெடுத்தனர். இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க, அதுவரை கடைப்பிடித்து வந்த இரு மொழிகளுக்கும் அரச மொழி அந்தஸ்து என்ற கொள்கை காற்றில் பறந்தது.

உத்தியோக மொழிப் பிரசாரத்துடன், உயர்பதவிகளிலும், அரச சேவையிலும் கடமையாற்றிவந்த தமிழர்களுக்கு எதிராகவும் பிரசாரம் வலுப்பெற்றது. இதனால், மொழி வெறி - இனவெறியாக மாறியது.

தமிழ் மக்கள் தங்கள் மொழி உரிமையையும், தமது தாயக உரிமையையும் பாதுகாப்பதற்கும் - சிங்கள மக்களைப் போன்று, அவர்களும் சமமாக உரிமைகளை அனுபவிப்பதற்கும், இணைப்பாட்சி என்ற சமஷ்டி ஆட்சி அமைப்பே இலங்கைக்கு தேவை என்று எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில், இலங்கைத் தமிழரசுக்கட்சி கோரிக்கையை முன்வைத்தது. 1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில், தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் தமிழரசுக் கட்சி போட்டியிட்டு, மிகப் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றியது.

சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்து, அந்த மசோதா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஜுன் 5 ஆம் திகதி நாடாளுமன்றப் படிக்கட்டுகளில், சபை கலையும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக தமிழரசுக் கட்சியினர் - சபாநாயகருக்கும், பிரதமருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் முறைப்படி அறிவித்துவிட்டுச் சென்றனர். அப்பொழுதே சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் இனத்துவேஷத்தைக் கிளப்பி, நாடாளுமன்றத்தை உடைப்பதற்காக செல்வநாயகம் தலைமையில் தமிழர்கள் செல்கிறார்கள் என்று பிரசாரம் செய்தன. இதன் விளைவாகப் படிக்கட்டில் பட்டினி கிடக்கச் சென்றவர்களை - குண்டர்கள் தாக்கி, மண்டையை உடைத்தனர். இதைப் பொலிஸார் வேடிக்கை பார்த்தனர்.

இதைத் தொடர்ந்து, கொழும்பு நகரில் சில இடங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் - தமிழர்மீதும், தமிழ்க் கடைகள் மீதும் - காடையர்களும், கொள்ளையர்களும் தாக்குதல் நடத்தினர். அம்பாறை, இங்கினியாகலையில் - தமிழர்கள் குடியேற்றப்பட்ட இடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் மசோதாவுடன் தொடங்கிய இனவெறி, 1958 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் தமிழ்மக்களுக்கு எதிராகப் பெரும் இனக்கலவரமாக மூட்டிவிடப்பட்டது. தமிழர்கள் பலர் உயிரிழந்தனர், ஊனமுற்றனர், உடமைகளை இழந்தனர். திட்டமிட்டு இந்த இனக்கலவரம் நடந்தது. உயிர்தப்பிய தமிழர்கள் - தமது தாயகமான வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்குக் கப்பல்களில் அகதிகளாகத் திரும்பினர்.

1956, 1958 ஆம் ஆண்டுகளில், இனவெறிக்குக் கிடைத்த வெற்றியில் தமிழ் இனத்தையே இலங்கையிலிருந்து அழித்துவிடலாமென்ற துணிவை, சிங்களப் பேரினவாதிகளுக்குக் கொடுத்தது. தமிழ்த்தலைவர்கள் காந்தியவழியில் சாத்வீகப் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது, பேரினவாதிகளுக்கு வாய்ப்பானது.

1977 - 1983 ஆம் ஆண்டுகளின் பின், தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தத்தொடங்கினர். பேரினவாத ஆட்சியாளர்களுக்கும், பேரினவாதிகளுக்கும் இது தடையாக அமைந்தது. உலக பயங்கரவாதத்துடன், விடுதலைப் புலிகளையும் சேர்த்து பிரிவினைவாதப் பயங்கரவாத விடுதலைப் புலிகள் என்று பிரசாரம் செய்தனர்.

சமஷ்டி ஆட்சியைப் பிரிவினை என்று பிரசாரம் செய்தவர்கள் - தமிழ மக்களையும், தமது தாயக மண்ணையும் காப்பாற்றுவதற்கு ஆயுதமேந்திய விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றனர்.

சாத்வீகப் போராட்ட காலத்தில் இன அழிப்பில் ஈடுபட்ட சிறிலங்காப் படைகளும், ஆட்சியாளர்களும்-



ஆயுதமேந்திய விடுதலைப் புலிகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறினர்.

போர்நிறுத்தத்தை ஏற்று, புதிய அரசு - விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தம், புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டது.

சமாதான முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கையில், போர்நிறுத்த சூழ்நிலையில் சிங்கள- தமிழ் உறவை வளர்ப்பதில், விடுதலைப் புலிகள் முனைப்புக்காட்டினர்.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் மானிடத்தின் ஒன்றுகூடல் என்ற ஒரு நிகழ்ச்சியை, விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் ஏற்பாடுசெய்து நடத்தியது. நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் அறிஞர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் இதில் கலந்துகொண்டனர். சிங்களக் கலைஞர்கள், படைப்பாளிகள், அறிஞர்கள் வந்திருந்தனர். இஸ்லாமிய அறிஞர்களும் வந்தனர். தமிழ் நாட்டிலிருந்தும் அறிஞர்கள், படைப்பாளிகள் வந்திருந்தனர்.

இந்த மானிடத்தின் ஒன்றுகூடல்- விடுதலைப் புலிகளும் மனிதர்கள் தான், மனிதநேயம் மிக்கவர்கள் தான் என்பதை சிங்களப் படைப்பாளிகளுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் உணர்த்தியது.

இதற்குப்பின், தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது, விடுதலைப் புலிகள் நேரடியாகவே அப்பகுதிக்குச் சென்று நிவாரணத்தை வழங்கினர்.

'பிரிவினைவாதப் பயங்கரவாதப் புலிகளின் உதவிவேண்டாம் என்று எவரும் சொல்லவில்லை. சிங்களப் பேரினவாத ஊடகங்களால்கூட, இந்த உதவியை மக்கள் பெற்றுக்கொள்ள மற்செய்ய முனையமுடியாமல் போய் விட்டது. அவர்கள் விடுதலைப் புலிகளை அன்புடன் வரவேற்றனர்.

கடந்த வாரம் கொழும்பில் ஆரியக் குழுமம் கூட்டிய சிங்கள- தமிழ் கலைக்கூடலில் - சிங்கள, தமிழ் அறிஞர்கள், படைப்பாளிகள், கலைஞர்கள் ஒன்றுகூடி, கருத்துப் பரிமாறி, கலந்துரையாடி, மகிழ்ந்தனர்.

சிங்கள - தமிழர் ஐக்கியம் ஏற்பட்டால் தமது அரசியல் செப்படி வித்தை செல்லாமல் போய்விடுமோ என்ற பயம் சிஹல உறுமய போன்ற பேரினவாத அமைப்புக்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

சிங்கள - தமிழ் கலைக்கூடலைக் குழப்புவதற்கு- சிஹல உறுமயவும், பேரினவாதப் பத்திரிகையாளர் சிலரும் கையாண்ட முயற்சியை, சிங்கள மக்களே தடுத்துவிட்டனர். தாங்கள் இரத்தத்தைச் சிந்தி, தமிழ்மக்களைப் பாதுகாத்து, இனவாதக் கும்பலை விரட்டியடித்து விட்டனர். 1956 ஆம் ஆண்டிலிருந்து, 1983 ஆம் ஆண்டுவரை இனக்கலகத்தைத் தூண்டிவிட்ட மாதிரி, 2003 இல் செய்யமுடியாமல், சிங்கள மக்களே தடுத்துவிட்டனர்.

பாதிக்கப்பட்ட தமிழர் இன்னும் மறுவாழ்வும், புனர்வாழ்வும் பெற முடியவில்லையாயினும், சிங்கள மக்களில் ஒருசாரார் விழித்துக் கொண்டார்கள் என்பதே எதிர்காலத்துக்கு நம்பிக்கையூட்டுவதாகும்.

வகுப்புவாதம் இனவெறி ஆகியவை இனிச் செல்லாக் காசாக்கப் படவேண்டும் என்பதற்கு வழிவகுத்த, ஆரிய குடும்பத்திற்கு நன்றிகலந்த வணக்கத்தைச் சொல்லவேண்டும்.

இதிலும்கூட, விடுதலைப் புலிகளுக்கு மேலும் ஒரு வெற்றிதான்.

என்றாலும், புதிய நகரசபை மண்டபத்தில் பரபரப்பை ஏற்படுத்தி, சிங்கள - தமிழ் கலைக்கூடலை நாடு முழுவதிலும் மட்டுமல்லாமல், உலகம் முழுவதிலும் பரப்பியதற்காக சிஹல உறுமயவுக்கும் ஒரு சாபஷ்.

விடுதலைப் புலிகளும், தமிழர்களும் - சிங்களவர்களுடன் இணைந்து ஐக்கியமாக வாழ்வதற்கு சிஹல உறுமய, ஜே.வி.பி போன்ற இனவாத அமைப்புக்கள்தான் இடையூறாக இருக்கின்றன.

**எஸ். எம். ஜி**

# கட்சிகளின் அதிகாரப் போட்டியால் மக்களின் அபிலாஷைகள் பலியாகும் நிலை

## புதிய ஜனநாயக்கட்சி அறிக்கை

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்திற்கும், பிரதமர் தலைமையிலான அரசாங்கத்திற்கும் இடையில் உருவாகியுள்ள ஆட்சி அதிகாரப்போட்டியில் - அரசியல் தீர்விற்கும், சமாதானத்திற்கும், ஜனநாயகத்திற்குமான மக்களின் அபிலாஷைகள் பலியிடப்படக்கூடிய சூழல் தோன்றியுள்ளது எனப் புதிய ஜனநாயக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாகவது -

பேரினவாத பின்னணியோடும், ஆட்சி அதிகாரப் பசியோடும் உருவாக்கப்பட்டுள்ள இந்த அரசியல் நெருக்கடியானது, மீண்டும் யுத்தத்தை மூட்டக்கூடிய அபாயநிலையைத் தோற்றுவித்துள்ளது. இத்தகைய அரசியல் அதிகாரப் போட்டி வளர்க்கப்படுவதை, எமது புதிய ஜன நாயக்கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. ஜனாதிபதியும், பிரதமரும் இந்த விடயத்தில் நாட்டினதும், வடக்கு - கிழக்கு மக்கள் உட்பட முழுமக்களினதும் நலன்கருதி, அரசியல் நெருக்கீடியைத் தணிக்க முன்வரவேண்டும். அதேவேளை, அரசியல் தீர்வின் ஆரம்ப நடவடிக்கையாக - புலிகள் இயக்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக அமைப்பு யோசனைகளைப் பேச்சவார்த்தைக்கு எடுக்க வேண்டும்.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் அரசியல்குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் - ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா உருவாக்கிச் சென்ற இன்றைய அரசியல் யாப்பில், இத்தகைய நெருக்கடி எதிர்பார்க்கப்பட்ட ஒன்றேயாகும். ஆனால், யுத்தமாக மாற்றப்பட்ட தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் சூழலில், குறிப்பாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான யோசனைகளைப் புலிகள் - இயக்கம் அரசாங்கத்திற்கு முன்வைத்த மூன்று நாட்களில், ஜனாதிபதி எடுத்துள்ள அதிகார நடவடிக்கைகள் விசனம் தருவதாகவே அமைந்துள்ளன. இந்த நடவடிக்கையானது, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனைகள் பற்றி அரசாங்கமும் - புலிகள் இயக்கமும் நடாத்தவுள்ள பேச்சுவார்த்தையை முறியடிக்கும் உள் நோக்கத்துடனேயே எடுக்கப்பட்டுள்ளது. இது கடந்த காலங்களில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு முயற்சிகள், நாடப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் ஏற்படுத்தப்பட்ட, திட்டமிட்ட குழப்பநிகழ்வுகளின் தொடர்ச்சி என்பதில் ஐயமில்லை.

ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள இந்த அதிகாரப்போட்டியும், அரசியல் நெருக்கடியும் - அரசியல் யாப்பை மையமாக வைத்தே நடாத்தப்படுகின்றது. ஜனாதிபதி - மூன்று அமைசசர்களின் பதவிகளைப் பறித்தமையும், அரசாங்கம் - பிரதம நீதியரசர் மீது குற்றப்பிரேரணை கொண்டு வர முயல்கின்றமையும், ஆட்சி அதிகாரப் போட்டியில் அரசியல் யாப்பினை தத்தமக்குச் சார்பாக வளைத்துக்கொள்ளும் முயற்சியேயாகும். இவை ஜனநாயகத்திற்குச் சாவுமணி அடிக்கும் செயற்பாடுகளேயாகும். நாட்டின் நலன், மக்களின் நல்வாழ்வு பற்றி இவர்களுக்கு அக்கறை கிடையாது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. முக்கியமாக யுத்த கோரங்கள் தணிந்துள்ள சூழலைக் குலைத்து, மீண்டும் அவற்றை அரங்கேற்ற நிற்கும் பேரினவாத யுத்த வெறியர்களுக்கு, ஜனாதிபதியின் நடவடிக்கைகள் நல்ல தீனியாக அமைந்தும் வருகின்றன. அதனாலேயே, ஜே.வி.பியினர்- ஜனாதிபதியின் நடவடிக்கைகளை வரவேற்றும் உள்ளனர்.

தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு இறுதிச் சந்தர்ப்பமாக ஏற்பட்டுள்ள இன்றைய சூழலில், இருபது வருட யுத்தத்திற்குப்பின், போராட்ட களத்தில் நின்ற விடுதலைப் புலிகள், தமது சொந்த யோசனைகளை இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனை அறிக்கை வரைபுகளாக முன்வைத்திருக்கிறார்கள். இதனைக் குழப்புவது - மீண்டும் யுத்தத்திற்கே வழிவகுக்கும். அவ்வாறு யுத்தத்தை மூட்டுவோர், இந்த நாட்டின் வரலாற்றில் - நாட்டுக்கும், மக்களுக்கும் மிகப்பாரிய துரோகமிழைத்தவர்களாகவே தம்மைப் பதிவு செய்து கொள்வார்கள் என்பதில் ஐயம் இருக்க முடியாது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***

# அமெரிக்காவின் இன்னொரு ஹெலி ஈராக்கில் வீழ்ந்து நொருங்கியது!

## ஆறு படையினர் மரணம்

(பாக்தாத்)

அமெரிக்க இராணுவ 'பிளக்ஹோக்' ஹெலிகொப்ரர் ஒன்று- சதாம் ஹுசேனின்சொந்த நகரான ரிக்ரிற்றில் வீழ்ந்து நொருங்கியதில் ஆறு அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டனர்.

ரிக்ரிற்றில் ஆற்றின் மேற்கு கரையிலுள்ள, மலையுச்சி கிராமம் ஒன்றின் மீது, மூன்று பிளக்ஹோக் கெலிகொப்டர்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தபோதே அவற்றில் ஒன்று தீப்பிடித்து எரிந்து வீழ்ந்து நொருங்கியதாகவும்,

இயந்திரக்கோளாறு காரணமாகவோ, ஹெலியில் தீப்பற்றியதாலோ இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று, அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

101 ஆவது வான்வளி நகர்வு டிவிசனைச் சேர்ந்த 6 படையினர் இந்தக்ஹெலியில் இருந்ததாகவும், இவர்கள் அறுவரும் கொல்லப்பட்டுவிட்டதாகவும் ரிக்ரிற்றில் ஆற்றங்கரையில் நிலைகொண்டுள்ள அமெரிக்காவின் 42 ஆவது காலாட்படை டிவிசனின் பெண் பேச்சாளர் மேஜர் ஜொஸ்லிம் அபேர்லி தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் ஹெலி, தரையிலிருந்து நடத்தப்பட்ட ஆர்பிஜி தாக்குதலிலேயே வீழ்ந்துநொருங்கியதாக இன்னொரு இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

கடந்த இரண்டுவாரகாலப்பகுதிக்குள் ஈராக்கில் மூன்றாவது ஹெலிகொப்டரைஅமெரிக்கா இழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.





# இந்திய மேற்கு வங்காள மாநிலத்தில் தேயிலைத்தோட்ட ஆட்சேர்ப்பில் மோதல்

## பத்தொன்பது பேர் பலி



இந்தியாவின் மேற்குவங்காளத் தேயிலைத் தோட்டம் ஒன்றிற்கு ஆட்சேர்ப்பின்போது, இரு மார்க்சிஸ தொழிற்சங்க ஊழியர்களிடையே நடைபெற்ற மோதலில் 19 பேர்வரை கொல்லப்பட்டுள்ளார்கள். இச்சம்பவத்தின்போது, 500 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் தொழிற்சங்க காரியதரிசியின் வீட்டை எரித்துள்ளார்கள்.

வெளியிலிருந்து ஆட்களை தேயிலைத் தோட்டத்திற்கு சேர்த்துக்கொள்ள எடுத்த நடவடிக்கையின் போது, ஒரு தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆதரவளித்தும், மற்ற தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததாலும் ஏற்பட்ட கைகலப்பினாலேயே இம்மரணங்கள் நிகழ்ந்ததாக பொலிஸ்அதிகாரி சாயன் முகர்ஜீ தெரிவித்தார்.

இறந்தவர்களில் இருவர் பெண்கள் எனவும், அடையாளம் காணமுடியாதவாறு இறந்தவர்களின் உடல்கள் கருகியுள்ளதாகவும் அந்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

## உலக நோக்கு

## பிரிட்டனில் உள்ள

# பாகிஸ்தான் தூதரகத்தில் ஒட்டுக் கேட்கும் சாதனம்!

பிரித்தானியாவில் அமைந்துள்ள பாகிஸ்தானிய தூதுவராலயத்தில் ஒட்டுக்கேட்கும் சாதனங்களை பிரித்தானிய புலனாய்வுத் துறையினர் 2001 ஆம் ஆண்டில் பொருத்தியது தொடர்பாக, விசாரணை ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என, பாகிஸ்தானிய அரசு கேட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இவ்வாறான நிகழ்வுகள் ஏற்படாது என்பதற்கான உறுதியையும், வழங்கவேண்டும் எனவும் அது கேட்டுள்ளது.

இஸ்லாமாபாத்திலுள்ள பிரித்தானியாவின் தூதுவர் மார்க்லயால் பாகிஸ்தானின் வெளிநாட்டு அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இவ்விடயம் தொடர்பாக விளக்கம் தருமாறு கேட்கப்பட்டுள்ளார். இதனிடையே பிரித்தானியாவின் சண்டே செய்திப்பத்திரிகை தெரிவித்த ஒருசெய்தியில், பிரித்தானியாவின் எம் 15 எனப்படும் புலனாய்வு அமைப்பு லண்டனில் உள்ள தூதுவராலயம் ஒன்றில் கட்டட வேலைகள் என்றபோர்வையில ஒட்டுக்கேட்கும் கருவிகளை பொருத்தியுள்ளது என, இரண்டு ஆண்டுகளுக்கு முன் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது பாகிஸதான் வெளிநாட்டமைச்சு பிரித்தானியாவில் அமைந்துள்ள தமது தூதுவராலயமே, அவ்வாறு ஒட்டுக்கேட்கும் கருவிகள் பொருத்தப்பட்ட கட்டிடம் எனத் தெரிவித்துள்ளது.



# ஈராக்கில் வெவ்வேறு தாக்குதலில் 2 அமெரிக்கப்படை பலி 9 பேர் காயம்



ஈராக்கில் நடத்தப்பட்ட வெவ்வேறு தாக்குதல்களில், இரண்டு அமெரிக்கப் படையினர் கொல்லப் பட்டதுடன், ஒன்பது படையினர் காயமடைந்தனர்.

நேற்றும், நேற்று முன்தினமும் நடத்தப்பட்ட தாக்குதலிலேயே, அமெரிக்கப் படையினர் இந்த இழப்புக்களைச் சந்தித்துள்ளனர்.

பாக்தாத்துக்கு அருகே 250 மைல் தொலைவிலுள்ள மொதுஸ் நகரின் கிழக்குப் பகுதியில், அமெரிக்க இராணுவ வாகனத் தொடரணிமீது நடத்தப்பட்ட ஆர்.பி.ஜி.தாக்குதலில், ஒரு அமெரிக்கச் சிப்பாய் பலியானார். மேலும் ஒன்பது பேர் காயமடைந்தனர்.

மொதுஸ் நகரின் விடுதி ஒன்றினருகே வீதியோரத்தில் குண்டு ஒனறு வெடித்த சம்பவத்தில் மேலும் மூன்று அமெரிக்கப் படையினர் காயமுற்றனர். முன்னதாக மொதுஸ் நகரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பொன்றில் ஒரு அமெரிக்கச் சிப்பாய் பலியானார்.

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் மட்டும் ஈராக்கில் 31 அமெரிக்கத் துருப்பினரும் இரண்டு அமெரிக்கச் மக்களும் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊர்சுற்றி எழுதுவது

அதிகாலை நான்கு மணிக்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எழுந்திருந்து, தனது கடமைகளைச் செய்யத் தொடங்கிவிடுவாராம். நேரம் கிடைக்கும் போதெல்லாம் புத்தகங்கள் படிப்பாராம். எந்த நேரமும் அவரது மூளை சுறுசுறுப்பாகச் செயற்பட்டுக்கொண்டே இருக்குமாம்.

சில வருடங்களுக்கு முன் நாலைந்து பத்திரிகையாளர்கள் சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கையில், ஒரு பத்திரிகையாளர் ஜே.ஆர்.பற்றி இப்படிப் பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தார்.

அதில், குறுக்கிட்ட மற்றொரு பத்திரிகையாளர், 'பிரேமதாஸா அதிகாலை மூன்று மணிக்கே எழுந்திருந்து, தம்மை அந்த நேரம் சந்திக்க வரும் பொது மக்களைச் சந்தித்து, அவர்கள் குறைகளைக் கேட்டு, அவற்றுக்குத் தகுந்த நடவடிக்கைளும் எடுப்பார் தெரியுமா?' என்று கேட்டார்.

அவர்கள் இருவருமே அதிகாலையில் எழுந்து, யார் காலை யார் முதலில் இழுத்துவிடுவது என்று போட்டி போட்டுத் திட்டமிட்டிருப்பாங்க என்றார் இன்னொரு பத்திரிகையாளர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத், தொடர்ந்து தேர்தலில் போட்டியிடாமலே, இரண்டு தவணைகளும் பதவீ வகித்தார். அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வந்து, மூன்றாவது தவணையில் ஜனாதிபதி பதவியிலிருப்பதற்குச் சிந்தித்து, ஒரு பொது வைபவத்தில் இலேசாக தமது கருத்தை மறைமுகமாக வெளியிட்டுப் பார்த்தார்.

பிரேமதாஸா விடவில்லை. ஜே.ஆருடன் தொலைபேசியிலேயே தமது கண்டனத்தை நேரடியாக தெரிவித்தாராம். இதன்பின் ஜே.ஆர் அந்த யோசனையைக் கைவிட்டுவிட்டாராம்.

இத்தகவலை ஒரு பத்திரிகையாளர்தான் அச்சமயத்தில் தெரிவித்திருந்தார்.

பிரேமதாஸாவும் போய்ச்சேர்ந்திட்டார். ஜே.ஆரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவீயை உருவாக்கி எப்படியெல்லாமோ நாட்டைக் குழப்பி பதவீயை அனுபவித்துப் போய்ச்சேர்ந்திட்டார். இப்போ எதற்கு இந்தப் பழைய கதையை என்றார் நண்பர்.

'அதிகார ஆசை யாரைத்தான் விட்டுது? ஏன் அதைச் சொல்லத்தான், பழைய கதையைச் சொன்னேன்' என்றேன்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை ஒழித்துக்கட்டப் போகிறேன் என்றுதான் ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு தடவையும் போட்டியிட்டு சந்திரிகா தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருந்து வருகிறார். இப்பொழுது அந்த ஜனாதிபதிக்குரிய அதிகாரத்தை வைத்து, மூன்று அமைச்சர்களை பதவியிலிருந்து நீக்கி அதிரடி வில்லத்தனம் காட்டியிருக்கின்றார் என்று தொடர்ந்தார் நண்பர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை ஒழிக்க வேண்டும் என்று சொல்லிச் சொல்லியே அந்தப் பதவிக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்திய ஒரேயொரு ஜனாதிபதி சந்திரிகாதான்.

இந்தப் பதவீயை ஒழிக்க வேண்டுமென்றுதான், முதலில் அம்மா நினைத்திருப்பார். ஆனால், அந்தப் பதவீயை அனுபவீக்கத் தொடங்கியதும், அதன் சுகம், அதைவிட மனம் இடங்கொடுக்காமல் போயிருக்கும். அதிகாரம், பதவி என்பவற்றின் சுகமே தனிதான்.

இந்தியாவின் தென்கோடியிலுள்ள அரியலூரில் நடந்த விபத்துக்காக, டில்லியில் ரயில்வே அமைச்சராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி விபத்துக்கு தார்மீகப் பொறுப்பேற்று தமது மந்திரிப் பதவியை தூக்கியெறிந்தார். இந்த மாதிரிப் பதவியை துறப்பதற்கு எத்தனை பேர் முன்வருவார்கள்?

இலங்கையிலும் இப்படியொருவர் ஒரு காலத்தில், பதவீயை பெரிதாகக் கருதாமல் தூக்கியெறிந்தவர் ஒருவர் இருந்தார்.

இலங்கையின் முதற் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க 1952 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், குதிரையிலிருந்து வீழுந்து செத்துப் போனார். தகப்பன் சேனநாயக்க தனக்குப் பின் தனது மகன் டட்லியை பிரதமராக்க வேண்டுமென்று, கவர்னர் ஜெனரலிடம் சொல்லியிருந்தார். அதற்குக் கட்சிக்குள் எதிர்ப்புக் கிளம்பியபோதும், செத்துப்போன அப்பனின் ஆசை நிறைவேற்றப்பட்டது. டட்லி பிரதமரானார்.

முதலாவது நாடாளுமன்றத்தின் ஆயுள் முடிவடைந்தாலும் தாம் மக்களின் ஆணையைப் பெறுவதற்காகவும், இரண்டாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலை டட்லி சந்தித்தார். டட்லி மீண்டும் பிரதமரானார்.

புதிய அமைச்சரவையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நிதியமைச்சரானார். புதிய வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார். அரிசி விலையை ஒரு கொத்து 25 சதத்திலிருந்து 75 சதமாக உயர்த்தினார். பண்டார நாயக்காவும் மற்றும் எதிர்கட்சிகள் கடையடைப்பு ஹர்த்தால் என்று கடும் எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்கினார்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில், இரண்டு மூன்று பேர் கொல்லப்பட்டனர் சிலர் காயமடைந்தனர். இச்சம்பவங்களினால், டட்லி மிக மனம் நொந்து, பிரதமர் பதவீயைத் தூக்கியெறிந்துவிட்டு சில காலம் அஞ்ஞாதவாசம் சென்றார்.

இலங்கையில் பிரதமர் பதவீயைத் தூக்கியெறிந்த ஒரேயொரு தலைவர், டட்லி சேனநாயக்காதான். இப்பொழுது மூன்று அமைச்சர்களைப் பதவிநீக்கம் செய்து, நாடாளுமன்றக் கூட்டத் தொடரையும் ரத்துச் செய்து, அவசரகால நிலையில் சில மணி நேரங்கள் நாட்டை வைத்திருந்ததும், சந்திரிகாவின் அதிகார ஆசைதான்!

பிரதமர் ரணில் வந்திறங்குவதற்கு முன்பே அவசரகால நிலை பிரகனத்தை வாபஸ் பெற்றுவிட்டார். இந்தப் பிரகடனம் வர்த்தமானியில் வெளியிடப்படவில்லையாம்.

சந்திரிக்காவுக்கும், ரணிலுக்கும் அதிகாரப் போட்டி என்றாலும், சிறிமாவுக்கும், ஜே.ஆருக்கும் அதிகாரப் போட்டியானாலும், பகடைக்காய்களாக்கப்படுவது தமிழ்மக்கள் தான்!

இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபைத் திட்ட வரையை வைத்துத் தான் நாட்டைப் பாதுகாக்க, மூன்று அமைச்சர்களையும் சந்திரிகா பதவிநீக்கம் செய்தாராம்.

அவசரகாலச் சட்டப் பிரகடனத்தை திரும்பப் பெற்றது போல, மூன்று அமைச்சர்களுக்கும். இனி பதவிப் பிரமாணம் செய்து வைப்பாரா?

இரு தரப்பும் ஒத்துழைக்க வேண்டும்மென்று பீடாதிபதிகளிலிருந்து ஜோர்ச் புஷ், வாஜ்பாய் வரை நெருக்குதல் கொடுத்தால், அம்மா வீட்டுக்கொடுத்துத்தான் ஆகவேண்டும். பதவி துறக்கமாட்டார்!

அமைச்சர்களை திடீர் திடீரென பதவிநீக்கம் செய்வதும், திடீர் திடீரென நியமிப்பதும், ஜெயலலிதா காட்டிக்கொடுத்த காட்சிகளோ?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உயிலங்குளம் சோதனைச் சாவடியில் படையினரால் பாதுகாப்புக் கெடுபிடி!

உயிலங்குளம் சோதனைச் சாவடியில் படையினரால், மக்கள் கடுமையான சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றனர்.

சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை அனைவரையும் உடற்பரிசோதனைக்கு உட்படுத்துவதுடன் - தேசிய அடையாள அட்டைகளும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது முதியவர் அடையாள அட்டைகளைக் காண்பித்தும், அடையாள அட்டைகள் இல்லாமலுமே இராணுவத் தடைமுகாம்களூடாக பயணம் செய்துவந்தனர். தற்போது முதியவர்கள் தேசிய அடையாள அட்டையை தடை முகாம்களுக்கு எடுத்துவரவேண்டுமெனவும், அவ்வாறு எடுத்துவராதவர்கள் படையினரால் திருப்பி அனுபபப்பட்டும் வருவதாகவும் தெரிவிக்கபபடுகின்றது.

அண்மையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் பாதுகாப்பு நிலைகளையும் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்துமாறு படையினருக்கு பணிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (10)

## நாற்சந்தி

சந்திரிகாவின் அரசியல் நடவடிக்கைகளுக்குப் பின்னர், நேற்றுக்காலை நாடு திரும்பிய ரணில் விக்கிரமசிங்கவுக்கு விமான நிலையத்திலிருந்து கொழும்புவரை வரவேற்பு ஊர்வலம் ஒன்றை நடத்தி அவருக்கான மக்கள் செல்வாக்கை ஐ.தே.முன்னணியினர் 'அதிரடி'யாக வெளிப்படுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினமே இந்தப் பேரணிக்கான திட்டம் வெளியானதையடுத்து அதனை நடைபெறாது தடுக்க ஊரடங்கு உத்தரவு அமுல்செய்யப்படலாம் என்ற செய்தி அரச வட்டாரங்களில் பேசப்பட்டபோதும், அப்படிச் செய்தால் அது மோசமான நிலையொன்றை உருவாக்கக்கூடும் என அஞ்சியதால், அது கைவிடப்பட்டதாகத் தெரிகிறது.

அவசரகால நிலைமை கூட தன்னால் பிரகடனம் செய்யப்படவில்லை என்று சந்திரிகா இப்போது பின்வாங்கத் தொடங்கியுள்ளார்.

சந்திரிகா பெரும்பாய்ச்சலுக்கு முயன்று அதில் தோல்விகண்டுவிட்டார் போன்றே தோன்றுகிறது.

ரணிலுடன் போர் தொடுத்தாலும், புலிகளுடன் பேசத்தான் வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு - அதற்குத் தான் தயார் என அறிவிப்பும் கொடுத்தது அவரது வீழ்ச்சி நிலையின் வெளிப்பாடேயாகும்.

இது புலிகளின் கம்பீரமான நிலைக்கு மேலும் வலுச்சேர்ப்பதாகவே உள்ளது என்பதே பலரதும் அபிப்பிராயம்.

'சந்திரிகா இப்போது தனது சமாதானத்திற்கான யுத்தத்தை ரணிலுடன் ஆரம்பித்துவிட்டார். எனவே, முன்னர் மேற்கொண்டதைப் போன்று யுத்தத்துக்கான சமாதானத்தை புலிகளுடன் ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கக் கூடும்.....' இதுதானே சிறிலங்காவின் அரசியல் வரலாறு - என்கிறார் ஒரு அரசியல் அலசல் பேர்வழி.

தெருவாசி

## ஜி.ஜி.பொன்னம்பலம் நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஸ்தாபகர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பிறந்ததின நினைவு நிகழ்வு- இன்று காலை 9 மணிக்கு குருநகரில் அமைந்துள்ள அவரது உருவச் சிலையடியில் இடம்பெறவுள்ளது.

இதில் - நினைவுரைகளும், அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ப)

## விடுதலைப் புலிகளுடன் இணைந்த இரு சிறுமிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைய வந்த இரு சிறுமிகளை பெற்றோரிடம் மீண்டும் விடுதலைப் புலிகள் ஒப்படைத்தனர். நேற்று மாலை கொக்குவில் பொற்பதியில் அமைந்துள்ள அரசியற்துறை அலுவலகத்தில் வைத்து, இரு சிறுமிகளும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அச்சுவேலிப் பகுதியைச்சேர்ந்த இரு சிறுமிகளும், சுயவிருப்பின் பேரில் இயக்கத்தில் இணையவந்ததாகவும், அவர்களின் வயதைக் கருத்திற் கொண்டே பெற்றோரிடம் ஒப்படைத்ததாகவும் யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி தெரிவித்தார்.

சிறுவர்கள் ஒப்படைக்கப்பட்ட நிகழ்வின்போது, மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த இரு அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ச)

## நாட்டின் சமாதானத்தை...

ஸ்தம்பிதமடைவதுடன், சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என்று, பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும், காங்கிரஸ் பிரதிநிதிகளும் தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக உறுதிவழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்லவேண்டுமென்று இலங்கைக்கு உதவிவழங்கும் சகல நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன. இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படாவிட்டால், இந்த நாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகள் அற்றுப்போய் விடுமென்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் தமது யோசனைகளை, அரசாங்கத்திடம் சமர்ப்பித்து, அது குறிதத்துப் பேசுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கின்றனர்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக, அடுத்த சில நாட்களில் அனைவரோடும் கலந்தாலோசனை நடத்த எண்ணியுள்ளேன். சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் விடயத்திலிருந்து நான் சற்றும் விலகப்போவதில்லை.

அரசாங்கம், வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கத் தயாராகிக்கொண்டிருக்கும் வேளையில், நாடாளுமன்றம் ஒத்தவைக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கும், விவசாயிகளுக்கும் நிவாரணங்களைப பெற்றுக்கொடுக்க இருந்ததாகவும், பிரதமர் ரணில் தெரிவித்தார்.

## 19 ஆம் திகதிக்குப் பின்...

இந்த நாட்டின் ஜனாதிபதியாகவும், முப்படைகளின் தளபதியாகவும், அமைச்சரவைத் தலைவராகவும் இருப்பதால் - நாட்டினது எதிர்காலம் கருதியே, இந்த நடவடிக்கை எடுக்க வேண்டியேற்பட்டது.

இந்த அரசாங்கம் பதவியேற்ற பின்னர், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிரான பல சம்பவகளில் ஈடுபட்டிருந்தது. அவர்கள் பழிவாங்கப்பட்டிருந்தனர். இது தொடர்பாக, பொலிஸாரினால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இவர்களுக்குரிய நஷ்டஈடும் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக, அரசுக்குத் தெரியப்படுத்தியும் குறுகிய அரசியல்லாபம் கருதியே சட்ட நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

இரண்டு தடவை ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் எனக்குத் தந்திருந்த ஆதரவின் அடிப்படையில் அரசியல் யாப்பின் பிரகாரம் - நீதியானதும், தேவையானதுமான நடவடிக்கைகளையே எடுத்துள்ளேன்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி புரிந்த 83 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை கொன்றது. பின்னர் வந்த ஆட்சிக்காலத்தில் 50 ஆயிரம் சிங்கள இளைஞர்களை கொன்றதும் இந்த ஐக்கிய தேசியக் கட்சியாகும். எனவே இந்த அரசின் ஆட்சியை மாற்றி, புதிய யுகத்தைக் கொண்டுவரவே அமைச்சரவையைத் பொறுப்பில் எடுத்துக்கொண்டேன்.

எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும், தனியார்மயப்படுத்தலுக்கு தொடர்ந்தும் ஊக்கமளிக்கும்.

நாடாளுமன்றம் இரண்டு வாரங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு பின்னர், அரசினால் நிதியமைச்சர் மூலமாக வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்கும்.

மேலும், புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதோடு, ஏற்பாட்டாளர்கள் தமது பொறுப்புக்களை மீறும் வகையில் நடக்கக்கூடாது எனவும், புரிந்துணர்வு நடவடிக்கைக்கு மாறான செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாதென முப்படையினருக்கும் கட்டளையிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சை சேர்ந்தவர்கள் எமக்கு ஒத்துழைத்து, நாட்டின் அபிவிருத்திக்கு சேவையாற்றுவதுடன், ஜனாதிபதியின் பதவிக்கு மரியாதை கொடுக்கும் அதேவேளை, குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயற்படவேண்டாம்.

இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே தமது நோக்கென்றும், எனினும் விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்வு யோசனை நடைமுறைக்கு ஒவ்வாதது. பயங்கரவாதத்தை அவர்கள் முற்றுமுழுதாகக் கைவிடவில்லை.

நாட்டின் பாதுகாப்பு, இறைமையை கட்டிக்காப்பதற்கு பிரதமரும் மற்றும் அனைத்துக் கட்சிகளும் இணைந்து ஒத்துழைத்து அபிவிருத்திக்கு உதவுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

## ரணில் விக்கிரம...

ஜனாதிபதி எதிர்ப்பல்ல என்றும், ஆர்ப்பாட்டங்கள் நடத்தும்போது, ஆயுதங்கள் கொண்டுசெல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுளளார் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரும், படைத்தரப்பினரும் பாதுகாப்பு அமைச்சின் கீழேயே இயங்குவதாகவும், பொலிஸ் திணைக்களத்தை உள்துறை விவகார அமைசசின் கீழ் கொண்டுவருவது தவறான விடயமெனெ, ஜனாதிபதி இந்தச் சந்திப்பின்போது சுட்டிக் காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதிக்கு...

மச்சர்கள் பதவி நீக்கம், புதிய நியமனங்கள் குறித்து பிரதமர் விளக்கம் கோரவுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பதினைத் திரட்டுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிரேஷ்ட அமைச்சர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசிய கட்சி முக்கியஸ்தர் ஒருவர் - நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான ஆவணங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுவருவதாகவும் குறிப்பிட்டார்.

## நாடு திரும்பிய...

வரவேற்றனர். பச்சைக் கொடிகள், பதாகைகள் கட்டப்பட்டு 25 கி.மீ நீளமாக வீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பொலிஸார் வீதியில் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

எட்டுமணிநேர மோட்டார் ஊர்திபவனியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகைக்கு அழைத்து செல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி கனடிய அரசாங்கம் கவலையடைந்துள்ளது!

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியையிட்டு கனடா அரசு மிகுந்த கவலையடைவதாக அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் பில் கிரஹாம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தமது வேறுபாடுகளைக் களைந்து, இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான் முயற்சிக்கு ஜனநாயக அடிப்படையில் தமது ஆதரவினை வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

கனடா உட்பட பெருமளவு நாடுகள் இலங்கையில் சமாதான முயற்சியில் தமது பங்களிப்பினை செலுத்திவருகின்றன. எனவே, நாட்டில் நிலையான சமாதான சூழலை ஏற்படுத்துவதற்கு, அனைத்து கட்சிகளும் தமது பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாட்டின் பல இடங்களில் மழை தொடருமென வானிலை அவதான நிலையம் நேற்று அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தற்போது பெய்துவரும் மழையினால் இயல்பு வாழ்க்கை பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் யாழ். குடாநாட்டில் 20.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், மன்னாரில் 29.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், வவுனியாவில் 10.6 குறைந்தளவு மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக, கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

தாழமுக்கம் நிலைகொண்டுள்ளதால் வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை இன்றும் பெயயுமெனவும் , எனவே, மக்களை அவதானமாக இருக்கும்படியும் கொழும்பு வானிலை அவதான நிலையம் கேட்டுள்ளது.

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1562 திகதி: 07.111.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Y | 9 | 9 | 3 | 6 | 1 | 8 |




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.